# அரசு ஊழியர்

மார்ச் 2021

மலர் : 42 இதழ் : 3

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக
அச்சிட்டு வெளியிடுபவர் : மு.அன்பரசு
ஆசிரியர் : ஆ.செல்வம்

ஆசிரியர் குழு
மு.அன்பரசு, மொ.ஞானத்தம்பி, மு.பாஸ்கரன்,
இரா.ந.நம்பிராஜன், தெ.வாசுகி
முகவரி : பழைய எண். 48
புதிய எண் 46, தேரடித் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
e-mail : arasuoozhiyar@gmail.com

*அச்சகம்: சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ், 19/1 & 21/2, கிட்டாபாத் கான் பகதூர் தெரு, எல்லீஸ் ரோடு, அண்ணாசாலை, சென்னை - 600 002.*

*ஆண்டுச் சந்தா : ரூ. 100 தனி இதழ் ரூ. 10*


## சூடா ஒரு கோப்பை சூப்

## நம்பாதே, அவனை நம்பாதே!

தேளின் கொடுக்கில்
தேன் வரும் என்பான்;
தெருக் குழாயில்
பால் வரும் என்பான்!

காலென்று சொல்லி உன்
கையைப் பிடிப்பான்;
காரியம் ஆனதும்
கழுத்தையே நெரிப்பான்!

குடிசைக்குள் கால் வைப்பான்;
குழந்தைக்கும் பேர் வைப்பான்;
தேர்தல் முடிந்தால் உன்
கூரைக்கு தீ வைப்பான்!

தேர்தலென்று வந்துவிட்டால்
நீயே தான் எஜமானன்;
சபலம் கொண்டு சாயாதே அது
அஞ்சு வருஷத்து அவமானம்!

– கவிஞர் **க. சந்திரகலா**



தலைவர் மடல்

## 'பகை முடிக்கும் பணி முடிப்போம்'

## பாகம்-2

## நம்மை அழைக்கிறது!

**து**வங்கி விட்டது தேர்தல் வேட்டை. இலவசங்கள் என்ற எலும்புத்துண்டுகளை வீசிவிட்டு சுயமரியாதை என்ற கஜானாக்களை சூறையாட கிளம்பிவிட்டது ஒரு கும்பல். ஏழைகளே நீங்கள் தான் எஜமானர்கள், விவசாயிகளே நீங்கள்தான் விருந்தினர்கள், தொழிலாளர்களே நீங்கள்தான் சமுதாயச் சிற்பிகள், ஆசிரியர்களே நீங்கள்தான் தெய்வங்கள் அரசு ஊழியர்களே நீங்கள்தான் அச்சாணிகள் என்ற கோஷங்கள் அவர்களிடம் இருந்து எழ ஆரம்பித்துவிட்டன. ஒட்டிய வயிறும் வெற்று உடம்புமாக ஏழைகள் அடுத்தவேளை உணவுக்காக அன்றாடம் திண்டாடிக்கொண்டிருக்க வெற்றி நடை போடும் தமிழக விளம்பரத்திற்காக அரசு கஜானாவிலிருந்து கடந்த இரண்டு மாதங்களாக சுமார் ரூ.2000 கோடி வரை செலவிடப்பட்டிருக்கிறது பொங்கல் பரிசு ரூ.2500ல் ஆரம்பித்து அடுக்கடுக்கான சலுகைகள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. நான்காண்டுகளாக கண்டுகொள்ளப்படாத மக்களுக்கு ராஜ சிம்மாசனமும் மயில் தோகை வெண்சாமரமும் வீசப்படுகிறது. எல்லாம் எதற்காக நான்காண்டு ஆட்சியின் அவலங்களை மறைப்பதற்காக மட்டுமல்ல இன்னொரு ஐந்தாண்டு காலத்திற்கும் இந்த தமிழகத்தை, தமிழ் மக்களை, தமிழகத்தின் சுயமரியாதையை, தமிழகத்தின் தனித்துவத்தை மதவாத மத்திய சர்க்காரிடம் மண்டியிட்டு அடகு வைப்பதற்காக.

இந்த ஆட்சியாளர்கள் ஏழைகளின் தோழர்களுமல்ல விவசாயிகளின் காவலர்களும் அல்ல, அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் நண்பர்களும் அல்லர். இவர்கள் வியாபாரிகள். ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை ஆசைகாட்டி அதன்பிறகு அரசாங்க கஜானாவை சுரண்டி சுரண்டி நாட்டையே போண்டியாக்கிவிடும் நாசகாரர்கள். இவர்களுக்கு அரசியலமைப்புச்

சட்டம் கொடுத்துள்ள பெயர் மாண்புமிகு ஆட்சியாளர்கள். இத்தகைய நபர்கள் மத்தியில் இருந்தாலும் மாநிலத்தில் இருந்தாலும் அவர்களின் சிந்தனைப்போக்கு மக்கள் நலன் என்பதாக சிறிதளவும் இருக்காது என்பதும் மக்கள் நலன் சார்ந்த திட்டங்கள் தப்பித்தவறி ஏதேனும் நடந்துவிட்டால் அது எதிர்கட்சி களின் வாயை அடைப்பதற்காக கொண்டு வரப்பட்டதேயன்றி உண்மையான அக்கறை யால் அல்ல என்பதற்கு இந்த நான்காண்டு காலத்தில் நாம் கண்ட பல உதாரணங்களைச் சொல்லலாம்.

ஒருபுறம் உடலுழைப்பு தொழிலாளர்களின் குறைந்தபட்ச தினசரி கூலி ரூ.600/- ஆக நிர்ணயிக்க வேண்டும், பட்டம் பெற்ற வேலையற்ற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வேண்டும், அரசுத்துறைகளில் பணிபுரியும் ஊழியர்களுக்கு தற்போதைய விலைவாசிக்கேற்ற ஊதிய மாற்றம் வேண்டும், விவசாயிகளின் வறுமையுடன் கூடிய வேதனையான வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும், என்றெல்லாம் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் மற்றும் பல்வேறு துறைவாரி சங்க ஊழியர்கள், ஆசிரியர்கள், தொழிலாளர்கள், விவசாயிகள் என பலவர்க்கப் பிரிவினரும் போராடினார்கள். ஆனால், ஆட்சியாளர்களோ தங்களுக்குத் தாங்களே (நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள்) வரைமுறையற்ற சம்பளம் மற்றும் சலுகை களை வழங்கிக் கொண்டார்கள். உச்சநீதிமன்ற, உயர்நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் தேர்தல் ஆணையர்களுக்கு மாதம் ரூ.2.50 லட்சமாக சம்பளத்தை உயர்த்தி வழங்கி அதை 2016 ஜனவரி 1 முதல் முன்தேதியிட்டு வழங்கினர். ஆனால் தொழிலாளர் நலன், விவசாயிகள் நலன், அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கு கொடுக்க வேண்டிய சட்டப்படியான ஊதிய மாற்ற நிலுவைகளைப் பற்றி கொஞ்சமும் அக்கறை கொள்ளவில்லை. கஜானாவில் பணமில்லை என்றவர்கள் எம்.எல்.ஏ.க்களுக்கு 110 சதவீதம் சம்பளத்தை உயர்த்தினார்கள். அரசு ஊழியர்களுக்கு நியாயமான ஊதிய மாற்றத்தை ஏற்படுத்தாததோடு, முரண்பாடுகளுடன் ஏற்படுத்தப்பட்ட ஊதியமாற்றத்திலும் தமிழகத்தில் 21 மாத ஊதிய மாற்ற நிலுவைத் தொகையை கொடுக்காமல் மறுத்தனர். விவசாயிகள், போக்குவரத்து தொழிலாளர்கள், மின்வாரிய ஊழியர்கள், மாணவர்கள் என அனைத்து பிரிவினரும் ஆட்சியாளர்களின் நடவடிக்கைகளுக்கு எதிராக போராட வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டனர்.

அரசு ஊழியர்களைப் பொறுத்தவரை புதிய பங்களிப்பு பென்சன் திட்டம் (CPS) திரும்பப் பெறப்பட்டு பழைய பென்சன் திட்டமே தொடரவேண்டும் என்ற கோரிக்கைகள் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகிறது. மேலும் மத்திய அரசின் 7வது ஊதிய மாற்றத்தில் பல்வேறு (Allowances) படிகள் மறுக்கப்பட்டுள்ளன. சில (Allowances) படிகள் குறைக்கப்பட்டுள்ளன. தமிழக அரசு ஊழியர்களுக்கு 1.1.2016 முதல் பெற வேண்டிய ஊதிய மாற்ற நிலுவைத் தொகை 21 மாதங்களுக்கு மறுக்கப்பட்டது.

உற்று நோக்கினால் கடந்த ஐந்து ஆண்டு களில் மத்திய ஆட்சி எடுத்த எல்லா நடவடிக் கைகளிலும் கடுமையாக பாதிக்கப்பட்டது, அன்றாடங்காய்ச்சிகளும், விவசாயிகளும், தொழிலாளர்களும், அரசு ஊழியர்களும்தான். பெட்ரோல் டீசல் சமையல் எரிவாயு ஆகிய வற்றின் விலைகள் விண்ணை முட்டி நிற்கின்றன. எதைப்பற்றியும் கவலைப் படா மல் இவற்றின் விலைகள் நாளுக்குநாள் ஏற்றப்பட்டுக் கொண்டிருப்பதால் காய்கறி உள்ளிட்ட அத்தியாசிய உணவுப் பொருட் களின் விலைகளும் ஏகத்துக்கு உயர்ந்துள்ளன. நாட்டை தனியார் மயமாக்கினால் என்ன ஆகும் என்பதை பெட்ரோலிய நிறுவனங்கள் அன்றாடம் விலைகளை நிர்ணயிப்பதிலிருந்து ஒவ்வொரு சாமானிய மனிதனும் புரிந்து கொண்டிருக்கிறான். தனியார் மயத்தில் மக்கள் நலன்கள் புறந்தள்ளப்படும் என்ற பொதுக் கருத்தை குழி தோண்டி புதைத்து வருகிறார்கள் ஆட்சியாளர்கள். இந்தப் போக்கு ஆட்சி யாளர்கள் மீது மக்களுக்கு மிகுந்த வெறுப்பைத் தோற்றுவித்துள்ளன.

தமிழகத்தைப் பொறுத்த வரையில் கல்வி, காவிரி, கலாச்சாரம், பொதுசேவை வரி, மீனவர்

பிரச்னை, மாணவர் எதிர்காலம், வேலை வாய்ப்பு என அனைத்துத்துறைகளிலும் மாநிலத்தின் உரிமைகள் அனைத்தும் மத்திய அரசிடம் அடகு வைக்கப்பட்டு, நிர்வாகம் சீர்கெட்டு, எத்திசையில் பார்த்தாலும் போராட்டங்களும், ஆர்ப்பாட்டங்களுமாய் கடந்த நான்காண்டுகளும் முடிந்துள்ளது.

ஜி.எஸ்.டியை அமுல்படுத்துவதன் மூலம் இந்திய நாட்டில் பொருளாதாரப் பிரச்னைகளும், வெகுஜன மக்களின் பிரச்னைகளும் தீர்ந்துவிடும் என மத்திய அரசு சொன்னது. ஆனால் அது அமுல்படுத்தப்பட்ட பிறகு எல்லாம் தலைகீழாக மாறியது. மொபைல் கட்டணம், எல்.ஐ.சி.பாலிசிகளுக்கான பிரிமியம்,வங்கி மற்றும் முதலீடுகள் முதலான சேவைகள், டிடிஎச் சேவைகள், ஆன்லைன் டிக்கட் புக்கிங், சுகாதார பாதுகாப்பு பிரிமியம், பள்ளிக்கட்டணம், இரயில்சேவைகள், குளிர்பானங்கள், சிகரெட்டுகள் மற்றும் புகையிலைப் பொருட்களின் விலை தாறுமாறாக உயர்ந்துள்ளது. சமையல் எரிவாயுவின் விலை அதிகரித்துள்ளது. சாமானிய மக்கள் பயன்படுத்தும் பொருட்களின் விலைகள் உயர்ந்ததால் உற்பத்தி குறைந்து வேலையின்மை பெருகியுள்ளது. இதனால் தொழில் வளர்ச்சி, வேலையின்மை, சுற்றுலா போன்ற தொழில்களும் பாதிப்படைந்துள்ளன.

கடந்த நான்காண்டுகளாக தமிழகத்தில் செயலற்ற ஆட்சியைத்தான் மக்கள் அனுபவித்து வருகிறார்கள். தமிழக மீனவர் பிரச்சனையில் இந்திய அரசு காட்டிவரும் அலட்சியம் கொஞ்சமும் மன்னிக்கமுடியாத பச்சைத்துரோகம் என்பது மீண்டும் மீண்டும் நிரூபிக்கப்பட்டு வருகிறது. ஜல்லிக்கட்டு தடையை நீக்க மத்திய அரசிடம் கேட்டபோது, வழக்கு உச்சநீதிமன்றத்தில் இருக்கிறது, உச்சநீதிமன்ற தீர்ப்பை மீறி எதுவும் செய்யமுடியாது என்று கூறியது. இதே மத்திய அரசுதான் காவிரியில் தண்ணீர் திறந்துவிடச்சொன்ன உச்ச நீதிமன்றத் தீர்ப்பை மதிக்காத கர்நாடகத்தை கண்டிக்காதது மட்டுமல்ல அதே உச்சநீதிமன்றத்தில் காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க முடியாது என்று 7 கோடி தமிழக மக்களும் அதிர்ச்சி அடையும்படி பதில்மனு தாக்கல் செய்தது. அதனை எதிர்த்துக் கேட்காமல் ஆளும் அதிமுக அரசு மௌனமாக இருந்தது. தூத்துக்குடியில் உள்ள ஸ்டெர்லைட் ஆலையை மூட வேண்டும் என்று அந்த மாவட்ட மக்கள் நூறு நாட்களாக போராட்டம் நடத்தினார்கள். நியாயமான முறையில் போராட்டம் நடத்திய மக்களை சிட்டுக்குருவிகளை சுட்டுத்தள்ளுவது போல் கண்மூடித்தனமாக சுட்டுத்தள்ளியது.

தமிழக அரசில் போதிய திட்டமிடுதல் கடைபிடிக்கப்படாததாலும், தொழில் வளர்ச்சியில் அக்கறை செலுத்தாததாலும், வளர்ச்சிக்கும் வருவாய்க்குமான திட்டங்கள் வகுக்கப்படாததாலும், அரசு கஜானா வழித்தெடுக்கப்பட்டுவிட்ட நிலையில், வெறும் கையில் முழம்போடும் பசப்பும், பாசாங்கும்தான் நடந்து கொண்டிருக்கிறது. அரசு நிர்வாகம் டாஸ்மாக் விற்பனையை வைத்துத்தான் நடைபெறுகிறது என்ற நிதர்சனமும், 500 டாஸ்மாக் கடைகளை இழுத்து மூடியதால் அரசுக்கு ஏற்பட்ட நட்டத்தை சரிகட்ட மதுவின் விலை உயர்த்தப்பட்டுள்ளது.

புதிய ஓய்வூதியத் திட்டத்தினை திரும்பப் பெற அரசுடன் தொடர்ந்து போராடியும் போர்க்கொடி தூக்கியும் பலவித போராட்டங்களை நடத்தினோம் நாம், அரசு கண்டுகொள்ளவில்லை. தமிழக இளைஞர்களின் எதிர்காலத்தை வேலை வாய்ப்புகளை, வாழ்வாதாரத்தை அழித்துவிடக்கூடிய அரசாணை எண்.56ஐ தீயிட்டுக் கொளுத்தி போராட்டம் நடத்தினோம். அரசு கண்டுகொள்ளவில்லை. காலிப்பணியிடங்களை நிரப்புங்கள் அப்போதுதான் அரசு அலுவலகத்தில் மக்களுக்கான பணி செய்ய முடியும் என்றோம். கவனத்தில் கொள்ளவில்லை. அரசுப்பள்ளிகளை மூடாதீர்கள் என்று சொன்னோம் காதில் போட்டுக் கொள்ளவில்லை. 3500 சத்துணவு மையங்களை மூடாதீர்கள் என்றோம். கடுகளவும் அவர்கள் எடுத்த முடிவிலிருந்து அசையவில்லை. இவை பற்றியெல்லாம்

முதலமைச்சரோ, நிர்வாக சீர்திருத்தத்துறை அமைச்சரோ, கல்வி அமைச்சரோ மக்களிடம் வாய்திறக்கவில்லை. அவர்களின் நோக்க மெல்லாம் ஆசிரியர்கள் மற்றும் அரசு ஊழியர்களுக்கு எதிராக பொதுமக்களை திசைதிருப்புவதாக மட்டுமே இருந்ததே தவிர அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் நியாயமான பிரச்னைகளை கேட்டு நிர்வாகத்தை சரிசெய்ய வேண்டும் என்றோ மாணவர்கள் நலனை காக்க வேண்டும் என்றோ இல்லை.

ஆக நம்மீது ஏறி சவாரி செய்துவிட்டு நமக்கான உரிமைகளை இப்போது தருகிறோம் அப்போது தருகிறோம் என்று கூறி கழுத்தறுத்து நம்முடைய பொறுமைகளைச் சோதித்து அரசுத்துறைகளை தனியார்மயமாக்கிட அரசாணை வெளியிட்டு, இம்மாநில இளைஞர்களின் அரசு வேலைவாய்ப்புக் கனவுகளை கானல் நீராக்கிட முனைந்திட்ட மாநில மத்திய அரசுக்கு எதிராக நாம் போராடிய போது அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் இக்கட்டான சூழ்நிலையில் சம்பள உயர்வு கேட்டு போராடுவதாக சித்தரித்து நம்மை முதுகில் குத்திய ஆட்சியாளர்களை தூக்கி எறிய வேண்டிய நேரம் வந்துவிட்டது. குறைந்தபட்சமாக ஒரு பேச்சுவார்த்தைக்குக் கூட கூப்பிடாமல் அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் என்ன செய்துவிடுவார்கள் என்கிற ஆணவ மனப்போக்கில் தமிழக அரசும் அமைச்சர்களும் கடைசி வரை நம்மை புறந்தள்ளியிருக்கிறார்கள்.

அரசாங்கம் நமக்கு செய்கிறேன் என்று வாக்குறுதி கொடுத்த கோரிக்கைகளை, சட்டப்படியாகவே நமக்கு கிடைக்க வேண்டி நிலுவைகள் மற்றும் அரசுத் துறைகளில் உள்ள காலியிடங்களை ஒழித்துவிட்டு கருவூல கணக்குத்துறை போன்ற துறைகளை தனியார்மயமாக்கும் நடவடிக்கைகளில் இறங்கி எதிர்கால இளைய தலைமுறையின் அரசு வேலைவாய்ப்பு உரிமைகளை வேரறுக்க நினைத்த ஒரு அரசாங்கத்தை எதிர்த்து போராடியும் உரிய பதிலோ நிவாரணமோ கிடைக்காத நிலையில் நம் கையில் இப்போது ஒரு வலிய ஆயுதம் கிடைத்துள்ளது.

**ஆட்சியாளர்கள் தங்கள் தவறை உணர வேண்டுமானால் அவர்களுக்கு நாம் தக்க பதிலடி கொடுக்க வேண்டும்.**

2003ஆம் ஆண்டு 1,76,000 பேர் ஒரே அரசாணையின் மூலம் டிஸ்மிஸ் செய்யப்பட்டு அவர்கள் அத்தனை பேரும் மீளப் பணி அமர்த்தப்பட்டதும், அதனைத் தொடர்ந்து வந்த நாடாளுமன்றத் தேர்தலில் 40 தொகுதிகளையும் இழந்ததையும், அப்போது அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் மக்கள் பிரச்சாரம் செய்து பகை முடிக்கும் பணி முடித்ததையும் நாம் மறந்துவிடக்கூடாது. இப்போது அதன் இரண்டாம் பாகம் நடந்து கொண்டிருக்கிறது. மீண்டும் நாம் பகை முடிக்கும் பணி செய்ய வேண்டிய நேரம் வந்துவிட்டது. அதே பாணியில் இப்போதும் நாம் மக்கள் பிரச்சாரம் செய்து நம்முடைய வேலையை கெடுக்கப் பார்த்தவர்கள் வேலைகளற்றுப் போகச் செய்ய வெஞ்சினம் கொள்ள வேண்டும். அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் சக்தி என்னவென்று உணர்த்த வேண்டும். நம்மீது கைவைத்தவர் களின் தலை மண்ணைக் கவ்வும் என்பதை தரணிக்கு இன்னொரு முறை பறைசாற்ற வேண்டும். எனவே புறப்படுவோம் தோழர்களே நமக்கான அணியின் வெற்றிக்காக பணி செய்ய, பகை கொய்ய, படை வெல்ல நாம் ஒவ்வொருவரும் தவறாமல் பங்களிப் போம்.

நமக்காக மட்டுமல்ல, நாட்டையும், நாட்டு நலனையும், நாட்டு மக்களையும் பாதுகாக்க இக்கடமையை செவ்வனே நிறைவேற்ற நாம் முன்நிற்போம். அனைத்து அரசு ஊழியர்களை யும், ஆசிரியர்களையும், ஓய்வூதியர்களையும், இதரபகுதி உழைப்பாளி மக்களையும், வாக்காளப் பெருமக்களையும் ஒன்றிணைப் போம். தமிழக அரசியல் மாற்றத்தில் வரலாறு படைத்தவர்கள் என்ற சாதனையை இன்னொரு முறை நிரூபித்து தமிழகத்தின் நலன்களை உரிமைகளை மத்திய அரசிடம் அடகு வைத்துள்ள தமிழக நச்சுக்கொடிகளையும், இந்தியாவை தனியார்மயத்திற்கும், மதவாத அரசியலுக்கும் ஆட்கொள்ளப்பார்க்கும் தீய சக்திகளையும் வேரறுப்போம் வாருங்கள். ■

மேசையிலிருந்து...

# ஹலாற்று சிறப்புமிக்க கோட்டை முற்றுகை போராட்டம்

**2021** பிப்ரவரி 19... அன்று அதிகாலையிலிருந்து தமிழகத்தின் தலைநகராம் சென்னை மாநகர் முழுவதும் பரபரப்பாகக் காணப்பட்டது. காலை 11 மணிக்கெல்லாம் சென்னை சேப்பாக்கம் விருந்தினர் மாளிகை முன்பாக ஆண்களும் பெண்களுமாய் பல்லாயிரக்கணக்கான அரசு ஊழியர்கள் கூடியிருந்தனர். நண்பகல் 12 மணிக்கு எல்லாம் சேப்பாக்கம் பகுதி முழுவதுமே வங்கக் கடலுக்கு இணையாக ஒரு மாபெரும் ஜன சமுத்திரமாக மாறியது என்றால் அது மிகையல்ல... ஆஹாவென்றெழுந்தது பார்... என்று பாரதி பாடியது போல் அரசு ஊழியர் பட்டாளம் ஆவேசத்தோடு அணிஅணியாய் வந்து கொண்டேயிருந்தது.

எதற்கு இந்த ஆவேசம்...?

ஏன் இந்த அணிவகுப்பு...?

இன்று தமிழகத்தில் ஆட்சிப் பொறுப்பில் இருக்கிற அதிமுக அரசு கடந்த 2011 சட்டமன்ற தேர்தலின்போது அன்று அதன் பொதுச் செயலாளராக இருந்த அன்றைய தமிழக முதல்வர் தேர்தல் பிரச்சாரத்தில் கூட்டங்களில் பொதுமக்களுக்கும், அரசு ஊழியர்களுக்கும் ஏராளமான வாக்குறுதிகளை வழங்கினார். அரசு ஊழியர்களை பொறுத்தவரை "புதிய ஓய்வூதிய திட்டம் ரத்து செய்யப்படும் தொகுப் பூதிய முறை ஒழிக்கப்பட்டு அனைவருக்கும் முறையான காலமுறை ஊதியம் வழங்கப்படும்" என்று பல வாக்குறுதிகளை அளிக்கப் பட்டன.

ஆனால்... தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்த பின்னால், (கடந்த 10 ஆண்டுகளில்) அந்த வாக்குறுதிகள் எதுவுமே, கண்டுகொள்ளப்படவில்லை... காற்றில் பறக்கவிடப்பட்டன. அன்றைய தமிழக முதல்வர் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற இன்றைய முதல்வருக்கு இந்த நான்கு ஆண்டுகளில் ஏராளமான கடிதங்கள் கொடுக்கப்பட்டன. அரசின் கவனத்தை ஈர்ப்பதற்கு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பாகவும், ஜாக்டே-ஜியோ சார்பாகவும் எண்ணற்ற போராட்டங்கள் நடத்தப்பட்டன. ஆனாலும் அரசு ஊழியர்களின் கோரிக்கைகள் குறித்து அரசு ஊழியர்களுக்கு அளிக்கப்பட்ட தேர்தல் கால வாக்குறுதிகள் பற்றி தமிழக முதலமைச்சர் நேரில் சந்தித்து பேச ஏராளமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனாலும், ஒருமுறை கூட தமிழக முதலமைச்சர் சந்திக்கவே முடியவில்லை.

தமிழக முதலமைச்சரை மட்டும் அல்ல அரசின் தலைமைச் செயலாளரைக்கூட சந்திக்க வாய்ப்பளிக்கப்படவில்லை. தமிழகத்தில் ஆட்சிப் பொறுப்பில் இருப்பது ஜனநாயக ரீதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசா? இல்லை சர்வாதிகாரத்தனமான மன்னராட்சியா என்ற கேள்வியின் வெளிப்பாடே இந்த ஆவேச முற்றுகை போராட்டம்.

### இது சட்டத்தின்வழி தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனநாயக அரசா

தமிழக ஆட்சி பொறுப்பில் இருப்பது இந்திய அரசியலமைப்புச் சட்டப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுதான் என்பதில் நமக்கு எள்ளளவும் சந்தேகம் இல்லை. ஆனால்... இன்றைய தமிழக அரசு அரசியலமைப்புச் சட்டத்தின்படி தான் செயல்படுகிறதா என்பதுதான் பிரதானமான கேள்வி மட்டும் அல்ல... ஆழ்ந்த ஆய்வு செய்யப்பட வேண்டிய ஒன்றாகும். ஜனநாயக ரீதியாக மக்களால் வாக்களிக்கப்பட்டு தேர்வு செய்யப்பட்ட அரசுகள் தன் ஆளுகையின்கீழ்

உள்ள மக்கள் அனைவருக்கும் நல்வாழ்க்கையை அமைத்துத் தரவேண்டியது அரசின் சட்டபூர்வமான கடமையாகும். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ளதற்கு மாறாக மக்கள் விரோத... மக்கள் நலனுக்கு எதிரான செயல்களில் ஈடுபட்டால் அது தேர்ந்தெடுக்கப்பட்ட அரசே என்றாலும் அது ஆட்சிப் பொறுப்பில் நீடிக்கத் தகுதியற்றதே.

இந்தியாவில்... மத்தியிலோ அல்லது எந்தவொரு மாநிலத்திலோ ஆட்சிப் பொறுப்பிலிருக்கிற எந்தவொரு அரசாக இருந்தாலும் அது இந்திய அரசியலமைப்புச் சட்டத்திற்கு மட்டும் அல்ல... இந்தியா உறுப்பினராக உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அனைத்து விதிகளுக்கும் கட்டளைகளுக்கும் கட்டுப்பட்டவையே. ஐ.நா.வின் எந்தவொரு விதியை மீறுவதும் விதிமீறலே... மக்கள் விரோத செயலே...

ஆனால் இன்று போராட்ட வரலாறு தெரியாதவர்கள் ஆட்சியில் அனைத்து போராட்டங்களும் அடக்குமுறையால் முறியடிக்கப்படுகிறது. ஆம்... இன்றைய தமிழக அரசு விபத்து மூலம் அமைந்தது ஆட்சியாளர்கள் அனைவரும் போராடி ஆட்சிக்கு வரவில்லை என்பதையே மக்களும், ஊழியர்களும் தற்பொழுது உணர்ந்திருக்கிறார்கள். பொய்யுரைக்கும் ஆட்சியாக மாறியிருக்கிறது.

அரசு ஊழியர் போராட்டம், போக்குவரத்து ஊழியர் போராட்டம், செவிலியர்கள் போராட்டம், மருத்துவர்கள் போராட்டம், மாணவர்கள் போராட்டம், விவசாயிகள் போராட்டம், அங்கன்வாடி ஊழியர் போராட்டம், மின் வாரிய ஊழியர் போராட்டம், ஆசிரியர் போராட்டம் என பல்வேறு போராட்டங்கள் இந்த காலகட்டத்தில் நடந்துகொண்டு இருக்கிறது. ஆனால், இந்த போராட்டத்திற்கு முழுமையான தீர்வை ஆட்சியாளர்கள் தரவில்லை காரணம் ஜனநாயக மாண்பை கிஞ்சிற்றும் கடைப்பிடிக்காதவர்கள் ஒட்டுமொத்த ஜனநாயகத்தை குழி தோண்டி புதைக்க முயற்சிக்கிறார்கள்.

அதன் வெளிப்பாடுகள்தான் போராட்டங்களுக்கான அடக்குமுறையை ஏவி விடுதல், அனுமதி மறுப்பது, விதிமுறையை மீறி சம்பளம் பிடிப்பது, சங்க நிர்வாகிகள் மீது வழக்கு பதிவு செய்து மிரட்டுவது, இயக்கங்களில் காவல் துறையினரை அதிக எண்ணிக்கையில் இறக்குவது என பல நடவடிக்கைகளில் இன்றைய ஆட்சியாளர்கள் முழுமையாக இறங்கி உள்ளார்கள். இதன் பின்புலத்தில்தான் மத்திய அரசின் கைப்பாவையாக செயல்படும் இந்த அரசை வைத்து தனது அரசியல் ஆதிக்கத்தை அடிப்படை உரிமைகளை மறுக்கும் கொள்கைகளை தீவிரமாக அமுல்படுத்த தொடங்கிவிட்டனர். (நீட் தேர்வு, புதிய கல்விக் கொள்கை உட்பட) தட்டிக் கேட்க திராணியில்லாத தமிழக அரசு தங்களை காப்பாற்றிக் கொள்ளவே மாநிலத்தில் நடக்கும் போராட்டங்களை மதிக்காமல், அழைத்து பேசாமல் அலட்சியப் போக்குடன் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

ஒருவகையில் சங்கம் அமைத்து கோரிக்கை வைத்து இனி போராட்டங்கள் நடத்தக் கூடாது என்பதை வெளிப்படையாக அமைச்சர்கள் சொல்வதும் அதைத் தொடர்ந்து காவல் துறையை வைத்து கயமைத்தனமாக அச்சுறுத்துவது தொடர்ந்து கொண்டு இருக்கிறது.

ஆனாலும் இத்தகைய அடக்குமுறை இருந்தாலும், கடந்த ஆட்சியாளர்களின் காலத்தில் இல்லாத அளவில் மக்களும், அமைப்புகளும் முதல்வரின் புள்ளி விவரப்படி பார்த்தால் 32000 போராட்டங்கள் நடந்துள்ளது, எத்தகைய அடக்குமுறையும் சந்திக்க தயாராவோம் என்பதையே இது உணர்த்துகிறது.

வெறும் கோரிக்கைளுக்காக மட்டும் நாம் போராடுவதில்லை. முதலில் உரிமை, சுயமரியாதை அதன்பின்னர் உரிமைகளை மறுக்கிற காலமாக மாறி வருகிறது. இத்தகைய போக்கினை அனுமதிக்க முடியாது. தமது ஆட்சியில் நடைபெற்ற அனைத்து போராட்டங்களையும் அடக்கிவிட்டோம் என்று கொக்கரிப்பது ஒரு நல்ல அரசுக்கு அழகல்ல. எத்தனை போராட்டங்களில் தீர்வு கண்டோம் என்பதில்தான் இந்த அரசின் வெற்றி

உள்ளது. மொத்தத்தில் இந்த அரசு எல்லா வற்றிலும் தோல்வி அடைந்திருக்கிறது என்று சொன்னால் அதுதான் உண்மையான வரலாறு.

அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் போராடினால் நிதி இல்லை, சத்துணவு ஊழியர்கள் போராடினால் நிதி இல்லை, போக்குவரத்து ஊழியர்கள் போராடினால் நிதி இல்லை என தொடர்ந்து சொல்லி வந்தாலும் முதல்வரும் தமிழக அரசும் இது உண்மையல்ல என்பது மக்களுக்கு தெரியும். (இந்தியாவில் மகாராஷ்டிராவுக்கு அடுத்து கடன் வாங்கிய மாநிலங்களில் தமிழ்நாடுதான் 5.7 லட்சம் கோடி கடன் வாங்கியுள்ளது) போராட்டங் களை நடத்தவிடாமல் முடக்குவதும், கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு தீர்வு எட்டப்படாத நிலையும் தொடருமானால் இப்படிப்பட்ட ஜனநாயக படுகொலை பார்த்துக்கொண்டு பொறுமை காக்க முடியாது. அதனால்தான் அரசு ஊழியர் சங்கம் போராட்ட களம் இறங்கியது. போராட்டங்களையும் கோரிக்கைகளையும் கண்டுகொள்ளாமல் இந்த அரசின் நடவடிக்கை தொடர்ந்த நிலையில் அதனை அலட்சியப்படுத்தி விட்டு அரசு ஊழியர் சங்கம் வேறு வழியில்லாமல் பிப்ரவரி 2 கோட்டை முற்றுகை போராட்டத்தை நடத்தினோம். அதன் விளைவு தான் ஒட்டுமொத்த ஆட்சியாளர்களின் தூக்கத்தை கலைத்தது இந்த கோட்டை முற்றுகை போராட்டம்.

என்ன லட்சிய நோக்குடன் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் துவங்கப்பட்டதோ அதற்காக இந்த 37 ஆண்டுகளும் அந்த லட்சியத்திற்காக சமரசம் செய்து கொள்ளாமல் தொடர்ந்து ஊழியர்களின் உரிமைகளுக்காக போராடி வருகிறது. அரசு ஊழியர்கள் மீதான உரிமைகள் மீது எந்தவொரு அரசாங்கமும் ஏனோ தானோ என்று முடிவெடுத்து விட முடியாதபடி ஊழியர்களை காப்பதும், அவர்தம் உரிமைகளை கேட்பதும், போராட்டங்களை முன்னெடுத்து அதிகார வர்க்கத்திற்கு எதிராக வாதாடுவதுமான நடவடிக்கைகளில் மற்ற இயக்கங்களை விட முன்னோடி இயக்கமாக இந்த இயக்கம் விளங்கி வருகிறது. தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தை புறந்தள்ளிவிட்டு எந்தவொரு அரசாங்கமும் அரசு ஊழியர்கள் உரிமைகள் மீது கை வைத்து விடவோ அல்லது கைவிரித்து விட முடியாத அளவுக்கு அரசு ஊழியர்களின் பாதுகாப்பு கவசமாக அரணாக இன்று ஒரு பெரும் இயக்கமாக விளங்குகிறது என்றால் அதற்கு காரணம் அதைத் தோற்றுவித்த ஆசான் எம்.ஆர்.ஏ.வும் அவர்வழி பற்றிய ஆளுமைத் தோழர்களின் அர்ப்பணிப்பு செயல்பாடுகளும் தொடர்ந்து நடத்திய போராட்டங்களும் விட்டுக்கொடுக்காத உரிமைகளும்.

இன்று அரசு ஊழியர் இயக்கம் ஒரு ஆலமரமாய் இருந்து அரசு ஊழியர்களை வெயிலிலும் மழையிலும் புயலிலும் இருந்து காத்து வருவது என்றால் அதற்கு காரணம் முன்னோடிகள் என்ற ஆணிவேரும் முன்னணி ஊழியர்கள் என்ற விழுதுகளும்தான். சில சுய நலங்களும் சில துரோகங்களும் சில தனிப்பட்ட மனிதர்களின் சீழ் பிடித்த சித்தாந்தங்களும் ஆட்சியாளர்களோடு அவர்கள் கொண்டிருந்த சாஷ்டாங்களுமே அவர்களிட மிருந்து பிரிந்து வந்து இந்த இயக்கம் தோன்றுவதற்கு காரணமாக இருந்தது. இன்று ஆட்சியாளர்களும் அரசியல்வாதிகளும் அதிகாரவர்க்கமும் அரசு ஊழியர்களின் உரிமைகளின் மேல் அவ்வளவு எளிதாக கை வைத்து விட முடியாது என்ற நிலை தோன்றியிருப்பதற்கு காரணம் அரசு ஊழியர் சங்கம் என்ற அமைப்பு தான் என்பதை பிப்ரவரி 19இல் கோட்டை முற்றுகையிட்டு எந்த அடக்குமுறையை கட்டவிழ்த்து விட்டாலும் ஊழியர்கள் நலனுக்காக எந்த எல்லைக்கும் செல்லும் என்பதை கடந்த பிப்ரவரி 2021, 19ல் நிரூபித்துள்ளோம்.

ஆனால் இன்று அரசு ஊழியர் சங்கத்தின் மீது மட்டுமல்ல பெரும்பாலான தொழிற் சங்கங்களின் மீது இவர்கள் எல்லாம் எப்போது பார்த்தாலும் போராட்டம் நடத்துகிறார்கள். இதனால் பொது மக்கள் அசௌகரியம் ஏற்படுகிறது என்பதுவுமான பொதுவான குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகிறது. அரசு ஊழியர்களும் மற்ற தொழிற்சங்கங்களும்

நடத்தும் போராட்டம் எல்லாம் அரசு ஊழியர்களும் அவர்தம் குடும்பங்களும் மட்டுமே பயன் பெறுவதற்காக நடத்தப்படும் போராட்டங்கள் என்ற ஒரு தவறான கற்பிதம் அரசியல்வாதிகளாலும் அதிகார வர்க்கத்தினராலும் சில விமர்சிகர்களாலும் பரப்பப்பட்டு வருகிறது. (உதாரணம் கொரோனா காலத்தில் இந்தியாவில் மிகச் சிறந்த பணியை தமிழக அரசு ஊழியர்கள் செய்துள்ளார்கள். பட்ஜெட் உரையில் கூறுகிறது தமிழக அரசு. அதுமட்டுமல்ல அரசு ஊழியர் ஓய்வு வயதை உயர்த்தியதை கண்டித்து நாடு முழுவதும் இளைஞர்களுக்கு வேலை கொடு என்று பிரச்சார இயக்கம், கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. மேலும் கொரோனா காலத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் ஒரு நாள் ஊதியம் கொடுக்கப்பட்டுள்ளது) அவர்கள் எல்லாரும் ஒன்றை மறந்துவிடுகிறார்கள். அல்லது மறந்து போய் நடிக்கிறார்களா என்பது தெரியவில்லை. உலக அளவில் அரசு ஊழியர்களின் ஊதிய நிலையை கருத்தில் கொண்டே தனியார் நிறுவன ஊழியர்களின் ஊதியம், தற்காலிக, தினக்கூலி உள்ளிட்ட அடிப்படை தொழிலாளர்களின் ஊதியங்கள் ஒழுங்குபடுத்தப்படுகின்றன. அரசு ஊழியர்கள் தங்கள் ஊதியம் மூலம் ஏற்படுத்தும் வாங்கும் சக்தியின் அளவு அடிப்படையிலேயே அத்தியாவசிய உணவுப் பொருட்கள் முதல் அன்றாடம் மக்கள் பயன்படுத்தும் பொருட்கள் உள்ளிட்டவைகளின் விலை நிர்ணயிக்கப்படுகின்றன. மக்களின் வாங்கும் சக்தி தான் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கும் சிறு மற்றும் பெரு தொழில் வளர்ச்சிக்கான ஆதாரங்களாக உள்ளன. ஆனால் கடந்த 16 ஆண்டுகளாக இவை தலைகீழாக மாறி விட்டன. ஒருபுறம் தேவைக்கேற்ப குறைந்தபட்ச ஊதியம் மறுக்கப்படுவதும் இன்னொரு பக்கம் உணவு, உடை போன்ற அத்தியாவசிய பொருட்களின் விலைகள் தாறுமாறாக உயர்ந்து வருவதாலும் நாட்டை அழிவுப் பாதையை நோக்கி திருப்பியுள்ளன. (உ-தா: பெட்ரோல், டீசல் விலை உயர்வு, சமையல் கியாஸ் விலை உயர்வு) இவை பணவீக்கம், கருப்பு பண நடமாட்டம், கள்ளச்சந்தை, லஞ்ச லாவண்யம், ஊழல், கையூட்டு போன்றவற்றிற்கு சிவப்பு கம்பளம் விரித்துள்ளன. தங்கள் வாழ்க்கையை நடத்தி செல்ல தேவையான கௌரவமான ஊதியம் அரசுப் பணி செய்பவனுக்கு மறுக்கப்படுவதன் மூலம் அவர்கள் கையூட்டு பெறுதல் போன்ற இழி செயல்களுக்கு உந்தப்படும் நிலை ஏற்படும் என்பதையும், அதன் மூலம் சாமான்ய மக்கள் அரசின் உதவிகள் பெறுவது முதல் உரிமைகள் பெறுவது வரை மிகுந்த இடர்ப்பாடுகள் எழுந்து சமூக சீர்கேடுகள் உருவாகும் என்பதால் தான் காலத்திற்கு ஏற்ற கௌரவமான ஊதியம் வழங்க வேண்டும் என்று பலமுறை அரசுக்கு உணர்த்தியும், அரசு பாராமுகமாக இருப்பதினால் அரசு ஊழியர் சங்கம் சமரசமற்ற போராட்டங்களை மேற்கொள்ள வேண்டிய அவசியம் எழுகிறது. அதே கல்வியில், வேலை வாய்ப்பில், இட ஒதுக்கீட்டில் இடர்பாடுகள் நேரும்போது அரசாங்கங்கள் மக்கள் மற்றும் சமூகத்தின் நலனை கருத்தில் கொள்ளாமல் கார்ப்பரேட்டுகளுடன் கைகோர்த்து காலிப் பணியிடங்களை பறிப்பதும், அவுட்சோர்சிங் மற்றும் ஒப்பந்த முறையில் ஊழியர்களை அமர்த்தி நிலையான வேலை வாய்ப்பு வாழும் சூழ்நிலை ஏற்படுத்தி தர மறுப்பதுடன் கார்ப்பரேட்டுகளுடன் கைகோர்த்து அவர்கள் பெரிய அளவில் லாபம் ஈட்டிடும் வகையில் சட்டங்களை வகுப்பதும் முதலாளிகளுக்கு 7.80 லட்சம் கோடி சலுகைகளை அளிப்பதும் கார்ப்பரேட்டுகளின் கடனை தள்ளுபடி செய்வதும் நடந்து வருகிறது.

இந்த பின்புலத்தில் நெருப்பை சந்திக்காத தங்கமோ, உளியை சந்திக்காத சிற்பமோ, விபத்தை சந்திக்காத தேசமோ, வீரச்சமர் புரியாத அமைப்போ முழுமை பெறுவதில்லை, வளர்ச்சி அடைவதில்லை. எந்த ஒரு இயக்கத்தின் வரலாற்றிலும் போராட்டங்களே எதிராளிகளை அதிகார வர்க்கங்களை அரசாங்கங்களை பணியவைக்கும் பெரிய ஆயுதங்களாக இருந்துள்ளன என்பதை இயக்க வரலாறு அறிந்த எவரும் உணர்வர். தமிழக அரசு

ஊழியர் வரலாற்றில் பலமுறை காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டங்கள் நடைபெற்றுள்ளன. அவற்றில் 1978, 1988, 2002, 2003, 2016, 2017, 2019 போராட்டங்கள் குறிப்பிடத்தக்கவை. இந்தப் போராட்டங்கள் மூலம் அரசாங்கங்களால் மறுக்கப்பட்ட அல்லது ஒதுக்கி வைக்கப்பட்ட உரிமைகளை அரசு ஊழியர்கள் வென்றிருக்கிறார்கள்.

ஆனால் பிப்ரவரி 2021, 19 உரிமைகுரல் முழங்குவோம், உதாசீனப்படுத்தினால் கோட்டையை முற்றுகையிட்டு முடக்குவோம் என்ற கோட்பாட்டுடன் முறையீடு வாங்க மறுக்கும் பட்சத்தில் கோட்டை முற்றுகை என அரசுக்கும் காவல்துறைக்கும் கோரிக்கை வைத்தோம். நமது சங்கத்தின் மாநில பிரதிநிதித்துவ பேரவையின் முடிவின்படி 4 கட்ட இயக்கத்தை முடிவு செய்தோம். பிரச்சார இயக்கம், மண்டலத்தில் கோரிக்கை மாநாடு, மாநில அளவிலான கோரிக்கை மாநாடு, தொடர் மறியல், சிறை நிரப்பும் போராட்டம். இவ்வியக்கங்கள் ஒவ்வொன்றும் ஒரு படிப்பினை மற்றும் அனுபவங்களை நமது ஊழியர்களுக்கு கற்றுக் கொடுத்திருக்கிறது.

எந்த ஒரு அமைப்பு இந்த கொரோனா காலத்தில் நடத்த இயலாத போராட்டங்களை மிக எழுச்சியோடு நடத்திக்காட்டிய இயக்கம் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம். தமிழகத்தில் எந்த அமைப்புகள், அரசியல் கட்சிகளும் நடத்த முடியாத மிக பிரம்மாண்டமான முறையில் மதுரையில் தொழிற்சங்கத்துக்கு உரிய கம்பீரத்துடன் அரசியல் கட்சித் தலைவர்களை இதுவரை சங்க வரலாற்றில் இல்லாத வகையில் காணொளி மூலம் தலைவர்களை பேச வைத்தது. தோழமைசங்க நிர்வாகிகளை நேரடியாக மேடையில் பேச வைத்தது. இரண்டும் ஒரே நேரத்தில் நடத்தியது. தமிழகத்தில் இதுதான் முதல் முறையாக இருக்கும். அப்படிப்பட்ட மாநாட்டை சங்கம் துவங்கிய மதுரையில் அதுவும் வேலைநாளில் பல்லாயிரக்கணக்கில் பங்கேற்ற மாநாடு அரசுக்கும் அதிகார வர்க்கத்துக்கும் ஒரு அச்சத்தை ஏற்படுத்தி அதன் விளைவுதான் இன்று மூன்று ஆண்டுகளாக நாமும், ஜாக்டோ ஜியோ தொடர்ச்சியாக போராட்டம் நடத்தியும், 5068 மேல் போடப்பட்ட குற்ற குறிப்பாணைகள் ரத்து செய்யாமல் தொடர்ந்து முரண்டு பிடித்துக்கொண்டிருந்த இந்த அரசாங்கத்தை பிப்ரவரி 2 முதல் தொடர் மறியல், சிறை நிரப்பும் போராட்டம் என்ற அறிவிப்புதான் அரசு வேகவேகமாக பிப்ரவரி 1ல் தமிழக முதலமைச்சர் அறிவிப்பு அரசு ஊழியர் ஆசிரியர் மீது போடப்பட்ட குற்ற குறிப்பாணைகள் ஒழுங்கு நடவடிக்கை அனைத்தும் ரத்து என அறிவிப்பு செய்ய வைத்த இயக்கம் தமிழ் அரசு ஊழியர் சங்கம் என்பதை யாரும் மறுக்க இயலாது.

தொடர் மறியல் சிறை நிரப்பும் போராட்டம் 9 நாட்கள் தொடர்ச்சியாக மறியல், கைது நடவடிக்கை மாலையில் விடுவிக்கப்பட்ட பிறகும் மண்டபத்தில் தங்குவது, மண்டபத்தில் இருந்து வெளியேற்றினால் ரோட்டில் அமர்ந்து போராட்டத்தை இரவு பகல் பாராது நமது தோழர்கள் நடத்திய போராட்டம் இதுவரை தமிழகத்தின் வரலாற்றில் இவ்வாறான போராட்டம் இதுதான் முதல்முறை. காவல்துறையின் அத்தனை அடக்குமுறையை நெஞ்சுரத்தோடு எதிர்கொண்ட அனைத்து மாநில, மாவட்ட, வட்ட, முன்னணி ஊழியர்கள், துறைச் சங்க தோழர்களும் எத்தனை முறை பாராட்டு தெரிவித்தாலும் தகும். இன்னும்கூட இப்போராட்டத்தை விரிவாக ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும். இந்தப் போராட்டம் வருங்கால சந்ததியினருக்கு ஒரு தொழிற்சங்க பாடமாக இருக்கும் என்பதில் ஐயமில்லை என்பதை இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

பிப்ரவரி 2021, 19 பெருந்திரள் முறையீடு செய்வதற்கு அங்கு காவல் துறை அனுமதி மறுக்கப்பட்டு நமது சங்கத்திற்கு கடிதம் கொடுக்கப்பட்டது. அதையெல்லாம் மீறி எங்களின் கோரிக்கைகளை முதலமைச்சர் அழைத்து பேசி தீர்வு காண வேண்டும் இல்லையென்றால் எங்கள் சங்கத்தின் மாநில செயற்குழு முடிவின்படி கோட்டை முற்றுகையிடுவோம் என்று மிக அழுத்தமாக காவல்துறையிடம் சொன்னோம். ஆனால்

காவல்துறை காலையிலிருந்து உங்களை அழைத்து பேசுவதற்கு ஏற்பாடு செய்து கொண்டு இருக்கிறோம் என்று சொன்னார்கள். ஆனாலும் மதியம் 1.40 மணி வரை அழைத்து செல்லவில்லை. காவல் துறைக்கும் நமது அமைப்பு சார்பில் குறிப்பிட்ட நேரத்தில் உ-தா 40 நிமிடத்தில் எங்களை முதலமைச்சரிடம் அழைத்து போகவில்லையென்றால் நாங்களே முதல்வரை சந்திக்க கோட்டை நோக்கி பேரணியாக செல்வோம், ஒலிபெருக்கியிலும் நேரடியாகவும் சொன்னோம். எந்தவிதமான பதில் வராத பட்சத்தில் கடுமையான சுட்டெரிக்கும் வெயிலிலும் நமது தோழர்கள் விடாப்பிடியாக அமர்ந்து இருந்த காட்சியாக நமது அமைப்பின் மேல் இருந்த உச்சபட்ச உணர்வுடனும் சங்கம் சொன்னால், எந்த சூழ்நிலையிலும் எங்களால் இருக்க முடியும் என்பதை ஊழியர்கள் காட்டியது அதுதான் அரசு ஊழியர் சங்கம் என்பதை நிரூபித்துக் காட்டியது.

அது மட்டும் அல்ல, புறப்படு தோழா கோட்டை நோக்கி என்று ஒலிபெருக்கியிலி சொன்னவுடன் இதுவரை பல்வேறு போராட்டங்களை பார்த்துள்ளோம். ஆனால் மைக்கில் சொன்ன மறுநிமிடம் பல்லாயிரக் கணக்கான ஊழியர்கள் மடை வெள்ளம் உடைந்து சீறிட்டு பாயும் வெள்ளம் போல் ஊழியர்கள் சென்றபோது ஒட்டுமொத்த காவல் துறையும் நிலைகுலைந்து நின்றது. அப்படி நமது தோழர்கள் கோட்டையை முற்றுகையிடு என்று சொல்லிக்கொண்டே வீறுகொண்டு நடந்து சென்ற காட்சி, ஓடிய காட்சி மறக்க முடியாது. இனி ஒருமுறை இவ்வாறு நிகழ்த்திக் காட்ட முடியுமா என்று கேள்வி நமக்குள்ளே கேட்டுக் கொண்டே இருக்கிறது.

கோட்டையை முற்றுகையிடச் சென்ற தோழர்களை பல தடுப்புகள் போட்டு தடுத்தது, அதை தகர்த்தெறிந்து போருக்கு செல்வது தொடர்ந்து பல இடங்களில் காவல்துறை கைகட்டி மறித்து தடுத்து நிறுத்தியபோது ராணுவத்தில் பயிற்சி பெற்று ராணுவ வீரர்கள் போல் அந்த கேட்டைத் தாண்டி குதித்து சென்ற காட்சிகள் இன்னும் கண்களில் இருந்து அகலவில்லை.

தோழர்களே இத்தனை தடைகளையும் மீறி கடுமையான தாக்குதல், மாநில, மாவட்ட, வட்ட, முன்னணி தோழர்களுக்கு காவல்துறை யின் தாக்குதல் நடத்திய பிறகும் அதை பொருட்படுத்தாமல் கோட்டை நோக்கி முன்னேறி சென்றார்கள். இதுவரை கோட்டை முற்றுகை என்று சொல்லி இருக்கிறோம். அதை நிரூபித்துக் காட்டுகின்ற வகையில் கோட்டை கதவுகளில் முட்டிமோதி எனது உரிமை பறிபோகும் போது, எதனையும் நெஞ்சில் தாங்கும் வல்லமை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத் தோழர்களுக்கு மட்டும்தான் உண்டு என்பதை நிரூபித்துக் காட்டிய உள்ள வரலாற்று சிறப்புமிக்க போராட்டம்தான் பிப்ரவரி 2021, 19 போராட்டம்.

தோழர்களே, 1988 ஞாபகப்படுத்துகின்ற வகையில் கோட்டையை முற்றுகையிட்டு தோழர்களை காவல் துறை, கருப்பு பூனை படை கடும் தாக்குதல் உள்ளாக்கப்பட்டு குண்டுகட்டாக தூக்கி வேனில் ஏற்றுகின்ற காட்சிகள் தொலைக்காட்சியில் பார்த்த அனைத்து தொழிற்சங்கத்திற்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது மட்டுமல்ல ஒரு நடத்தர வர்க்கம் ஊழியர்களின் நலனுக்காக சுதந்திரம் அடைந்து 72 ஆண்டுகள் கடந்த பின்பும் கோட்டையை எந்த அமைப்புகளும் முற்றுகை யிட்டதில்லை என்பதே அனைத்து தொழிற் சங்கங்களின் பாராட்டுதலைப் பெற்றுள்ளது.

மேலும் கோட்டையை முற்றுகையிட்ட தோழர்களை காவல்துறை கைது செய்யப்பட்டு பல்வேறு மண்டபங்களில் அடைக்கப்பட் டார்கள். மாநில, மாவட்ட, வட்ட, முன்னணி தோழர்கள் அவர்களை எந்த இடத்தில் கூட்டம் நடத்தினோமோ அதே இடத்தில் சென்னை விருந்தினர் மாளிகையில் கொண்டு வந்து விடும் வரை மாநில நிர்வாகிகள் போகமாட் டோம். எங்கள் ஊழியர்கள் பலர் கலந்து கொண்டு இருக்கிறார்கள். அவர்களை விடுதலை செய்து காவல்துறை வாகனத்தில் கொண்டு வரவேண்டுமென்று. விருந்தினர் மாளிகை முன்பு நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது பைக் சாவிகளை ஒப்படைக்கவில்லை என்றால் அந்த இடத்தை விட்டு செல்ல மாட்டோம்

என்று சொன்னவுடன் காவல்துறை வாகனத்தில் அழைத்து வந்ததோடு மட்டுமல்ல பைக் சாவிகளை காவல்துறை ஒப்படைக்கப்பட்டது என்பது மீண்டும் சரித்திரம் படைத்திருக் கிறோம்.

கைதுசெய்யப்பட்ட தோழர்கள் காவல்துறை வாகனத்தில் கொண்டு வந்து விருந்தினர் மாளிகை முன்பு இறக்கி விடும்போது அங்கே காத்திருந்த தோழர்கள், சிறை சென்ற தோழர்களை வாழ்த்தி வரவேற்று விண்ண திரும் கோஷமிட்டது, ஒவ்வொரு ஊழியர் களுக்கும் தனது உடலில் புதிய இரத்தம் பாய்ச்சியது போல் எழுச்சியோடு அந்நிகழ்வு நடந்தது மறக்கமுடியாதது.

பிப்ரவரி 19 இரவு 8.40 வரை விருந்தினர் மாளிகை முன்பு காத்திருந்து, தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்ட மாநில, மாவட்ட, வட்ட, முன்னணி ஊழியர்கள், மருத்துவமனை சென்று சிகிச்சை முடிந்த பிறகு மீண்டும் கூட்டத்தில் பங்கேற்றது என்பது தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க தோழர்கள் எந்த சூழலிலும் சங்கத்திற்காக எந்த தியாகமும் செய்ய வந்தவர்கள் என்பதை நிரூபித்துள்ளார்கள். அதுமட்டுமல்ல தோழர்களே, பெண் தோழர்கள் இவ்வியக்கத்தில் அதிக எண்ணிக்கையில் பங்கெடுத்து மிக சிறப்பு அம்சமாகும்.

பல்வேறு பெண் தோழர்கள் பல்வேறு தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்கள். அதில் திருப்பூர் மாவட்டத்தை சேர்ந்த தோழர் ராணி, கால்நடை துறையில் பணிபுரிகிறார். காவல்துறையில் கடும் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டு கால் முறிவு ஏற்பட்டு ராயப்பேட்டை மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு மாவுக்கட்டு போட்டு ஓய்வெடுக்காமல் மீண்டும் கால் முறிவு ஏற்பட்ட காலுடன் களத்திற்கு வந்தது என்பது தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மீது உள்ள உணர்வுகளை வெளிக்காட்டி உள்ளது. அந்த தோழர் நான் நேரடியாகப் பார்த்துப் பேசியபோது தோழரே கால் முறிவு ஒரு பெரிய பொருட்டு அல்ல, புதிய பென்சனை ரத்து செய்துவிட்டால் போதும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் நிச்சயம் பெற்றுத் தரும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது என்று சொன்னார். அதுதான் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம். எந்த சக்தியாலும் எவராலும் அசைக்க முடியாத அமைப்பாக தமிழகத்தில் நிர்ணயிக்கக்கூடிய அமைப்பாக திகழ்ந்து கொண்டிருக்கிறது.

எனவே, தோழர்களே், நம்மை வஞ்சித்த அரசிடம் நமது வாழ்வாதார பிரச்சினைகளை வென்றிடத்தான் அரசின் இத்தகைய அடக்குமுறைகள், பொய்யுரைக்கு மத்தியிலும், கோரிக்கை நியாயமானது என்பதாலும் பல அடக்குமுறைகளுக்கு மத்தியில் மீண்டும் கடந்த காலங்களில் நம்மை பகைத்தவர்களை பழி தீர்த்தவர்களை இனம் கண்டு நமக்கு கிடைத்துள்ள அரிய வாய்பை இந்த சட்டமன்ற தேர்தலில் நாம் முழுமையாக பயன்படுத்தி அரசு ஊழியர்கள், ஆசிரியர்களை தீவிரவாதகிள் போல் நடத்தி துறை நடவடிக்கை காவல் துறை நடவடிக்கை மேற்கொண்டு பெண் ஊழியர்களை தாக்கிய சிறையில் அடைத்த காயப்படுத்தி களங்கப்படுத்தி முதுகில் குத்திய கயமையை வேரறுக்கும் கடமையாற்றுவோம்.

ஒன்றுபடுவோம் போராடுவோம் முன்னேறுவோம். ■


## ஆழ்ந்த அஞ்சலி



தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் வேலூர் மாவட்ட முன்னாள் துணைத் தலைவரும், TASA இயக்கத்தின் மூத்த தலைவர்களில் ஒருவருமான தோழர் த.இளஞ்சேரன் அவர்கள் 26.02.2021 அன்று இயற்கை எய்தினார். அன்னாரது கண்கள் மற்றும் உடல் கொடையாக சி.எம்.சி. மருத்துவமனைக்கு வழங்கப்பட்டது. அன்னாரது மறைவிற்கு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் வீரவணக்கத்தையும், ஆழ்ந்த அஞ்சலியையும் செலுத்துகிறது.

# சர்வதேச மகளிர் தினமும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கமும்

மார்ச் 8 சர்வதேச மகளிர் தினம் என்பது கொண்டாட்டத்தினால் உருவானதல்ல, நீண்ட நெடிய போராட்டத்தினால் உருவானது. உழைக்கும் பெண்கள் மீதான உழைப்புச் சுரண்டலை எதிர்த்தும், 12 மணி நேரமாக இருந்த வேலை நேரத்தை 8 மணி நேரமாக குறைக்கவும், கூலி உயர்வு கேட்டும், வாக்குரிமை கோரியும், பாலின சமத்துவத்திற்காகவும் 15000 உழைக்கும் பெண்கள் அமெரிக்காவின் நியூயார்க் நகர வீதிகளில் 1908-ம் ஆண்டு மார்ச் 8ம் தேதி மாபெரும் பேரணியை நடத்தினர். மாபெரும் புரட்சிக்கான விதை விதைக்கப் பட்டதும் இந்நாளில் தான். டென்மார்க் கோபன் கேகன் நகரில் 1910ஆம் ஆண்டு நடைபெற்ற உலக சோசலிஸ்ட் பெண்கள் மாநாட்டில் தோழர் கிளாரா ஜெட்கின் அனைத்து நாட்டிலும் உள்ள பெண்களின் சம உரிமைக்காகவும், வாக்குரிமைக்காகவும் மார்ச் 8 ஐ சர்வதேச மகளிர் தினமாக பிரகடனப்படுத்தி னார். முதல் உலகப்போர் நடைபெற்ற போது ரஷ்யாவில் பெண்கள் ‘போர் தேவையில்லை மாறாக எங்களுக்கு அமைதியும் ரொட்டியும் தாருங்கள்’ என்று வலியுறுத்தி போராட்டத்தை தொடங்கினர். இப்போராட்டம்தான் பின்னாளில் ரஷ்யப் புரட்சிக்கு வித்திட்டது.



கிளாரா ஜெட்சின்

இந்தியாவில் பெண்கள் நிலை என்பது ஒரே சீரானதாக அமையவில்லை. பாரதிகண்ட புதுமைப்பெண்களாய் அனைத்து துறைகளிலும் ஒரு சில பெண்கள் தடம் பதித்தாலும் பாலின சமத்துவமின்மையால் பெண்சிசு கொலை செய்யப்படுவதும், கல்வி மறுப்பும், ஆணவக் கொலைகளும், வரதட்சணை (தற்) கொலை களும், அதீத உழைப்புச் சுரண்டல்களும், பணிபுரியும் இடங்களில் பாலியல் சீண்டல் களும் தொடர்ந்துக் கொண்டுதான் இருக்கின் றன. பிற்போக்கு ஆதிக்கவாதிகளால் ஆளக்கூடிய இந்தியாவில் பெண்களுக்கு பாதுகாப்பில்லையென்றும் பெண்கள் வாழ தகுதியற்ற நாடுகளின் பட்டியலில் இந்தியா தொடர்ந்து முதலிடத்தில் இருப்ப தாகவும் இங்கிலாந்தின் ராய்டர்ஸ் நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

செவ்வாய் தோஷம் என்று சோதிடத்தை நம்பி திருமணமாகாத பெண்கள் வாழும் நாட்டிலிருந்து சென்ற சுவாதி என்ற இந்திய வம்சாவளிப் பெண் நாசாவில் மார்ஸ்2020 வழிகாட்டுதல் மற்றும் கட்டுப்பாடு இயக்கத்தின் தலைவ ராக இருக்கிறார். பிப்ரவரி 19,2021 அன்று செவ்வாய் கிரகத்தில் தரையிறக்கப்பட்டுள்ள "பெர்சிவரன்ஸ் ரோவர்"" என்ற இயந்திரத்தை செவ்வாய் கிரகத்தில் வெற்றிகரமாக தரையிறக்கி ஆய்வு செய்து வருகிறார். இது பெருமைக்குரியதாக இருந்தாலும் இந்தியாவில் பெண்களின் நிலை மாற இன்னும் இரண்டாயிரம் ஆண்டுகள் ஆகும் நிலை தான் நீடிக்கிறது. குடிமக்களுக்கு பாதுகாப்பு கொடுக்கும் காவல் துறையின் உயர்பதவியில் இருக்கும் ஒரு பெண் ஐபிஎஸ் அதிகாரிக்கு தனது உயர் அலுவலர் பாலியல் தொல்லை கொடுக்கப்பட்டதும் பாதிக்கப்பட்ட பெண் காவல்துறை அதிகாரி யின் புகார் உதாசீனப்படுத்தப்பட்டதும் நாமறிந்ததே. பாராளுமன்றத்தின் இளம் பெண் எம்.பி பழங்குடியினத்தை சேர்ந்த சந்திராணி முர்மு (பிஜூ ஜனதாதளம்) வின் மீது வலைதளங்களில் அவதூறு பரப்பபட்டது. இந்தியாவில் பெண்கள் எவ்வளவு பெரிய உயர்பதவி வகித்தாலும் அவர்களை பாலினக் கருவியாக பார்ப்பதுதான் உட்சபட்ச வேதனை.

அரசு அலுவலகங்களில் பணிபுரியும் பெண்களுக்கு அனைத்து அலுவலகங்களிலும் விசாகா கமிட்டி அமைக்க முதன் முதலில் போராடியது தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் தான். பணிபுரியும் அலுவலகங்களில் பெண்க ளுக்கு மறைமுகமாகவோ நேரடியாகவோ ஏற்படும் பாலியல் துன்புறுத்தல்கள் உள்ளிட்ட பலவேறு களப்பிரச்சினைகளில் தலையிட்டு தீர்வுகாணக்கூடிய வகையில் மாநில மைய வழிகாட்டுதலுடன் தமிழகம் முழுவதும் மகளிர் துணைக்குழுக்கள் மிகச்சிறந்த முறை யில் பணியாற்றி மற்ற சங்கங்களை விட முன்மாதிரியாக திகழ்கிறது.

நமது நியாயமான வாழ்வாதார கோரிக்கை களையும் பறிக்கைப்பட்ட உரிமையை

மீட்டெடுக்கும் போராட்டங்களில் அரசின் அடக்குமுறைகளுக்கு எதிராக பிப்ரவரி 2 முதல் தொடர் மறியல் மற்றும் சிறைநிரப்பும் போராட்டத்தில் "அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே! உச்சி மீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமென்பதில்லையே!" என்று இரவு பகலாக உறுதியோடு போராட்டக் களத்திலேயே தன்னை அர்ப்பணித்துக்கொண்ட பெண் அரசு ஊழியர்கள் வீரப்பெண்மணிகள் என்பதில் ஐயமில்லை. 19.02.2021 அன்று அரசு ஊழியர் சங்கம் நடத்திய தமிழக முதல்வரிடம் பெருந்திரள் முறையீடு இயக்கத்தில் நமது முறையீட்டின் மீதான தமிழக முதல்வரின் அலட்சியத்தால் முற்றுகை போராட்டமாக மாறியபோது நமது அரசு ஊழியர்கள் இயக்க வரலாற்றில் ஒரு மைல் கல்லாக போராட்டத் தில் பெண்கள் அதிக எண்ணிக்கையில் பங்கேற்றது மட்டுமல்லாமல் திருப்பூர் மாவட்டம் தோழர் ராணி அவர்களை காவல் துறை தாக்கியதில் கால் முறிவு ஏற்பட்டும் தனது காயத்திற்கு கட்டுப்போட்டு மீண்டும் அவர் களத்தில் வந்து காவல் துறைக்கும் தமிழக முதல்வருக்கும் சி.பி.எஸ் இரத்து செய்யாமல் இந்த இடத்தை விட்டு அகலமாட்டேன் என்று சூளுரைத்தது போராட்டக்களத்தில் மயிர்கூச் செரியும் காட்சியாக அமைந்தது. அதே போல திருவள்ளூர் மாவட்டம் தோழர் திவ்யா அவர்களின் மீது காவல் துறை பேரிகாட் மூலம் தாக்கியதில் காலில் காயம் ஏற்பட்டும், தோழர் வெண்ணிலா அவர்கள் காவல் துறையின் அடக்குமுறையில் பேரிகாட் அடியில் சிக்கிக் கொண்டதில் கையில் அடிபட்டு இரத்த காயம் ஏற்பட்ட நிலையில் இரத்தம் ஒழுகிக் கொண்டே இருந்தபோதும் போராட்ட களத்தை விட்டு அகலாமல் அமர்ந்திருந்தது பெண்களின் மனவுறுதியின் வெளிபாடாகவும் வேலு நாச்சியாரையும், ஜான்சி ராணியையும், ராணி மங்கம்மாவையும் நினைவுபடுத்துவதாக அமைந்திருந்தது. இவர்கள்மட்டுமல்லாமல் இன்னும் நிறைய வீரபெண் களப்போராளி களுக்கு பல்வேறு காயங்கள் ஏற்பட்ட போதும், மயக்கமுற்ற போதும், அரசு ஊழியர்களை அரசு வஞ்சிக்கும் போது வஞ்சியர்கள் வெஞ்சினம் கொண்டு வெகுண்டெழுந்ததை போராட்டக் களத்தில் காண முடிந்தது.

வீடு, அலுவலகம் என்ற குறுகிய நிலைமாறி பெண்களின் இயங்குதளம் விரிவடையவும் தன்னம்பிக்கை, அடிமை மனப்பாண்மை




ஒழித்தல், பாலின சமத்துவ விழிப்புணர்வு பெறுதல், வாழ்வுரிமை, பேச்சுரிமை வலியுறுத்தல் ஒட்டுமொத்த பெண் சமூகப் பிரச்சினைகளை அணுகி தீர்வு காணுதல் என பெண்ணடிமை சமூகத்தை மாற்றி புத்தெழுச்சி கொண்ட சமூகத்தை படைக்க தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் உறுதி பூண்டுள்ளது.

*....கொடுத்தும், பெற்றும்*
*உரிமைகளும் சமத்துவமும் உதித்ததில்லை*
*கெஞ்சுவதால் வருவதில்லை ; உரிமை தன்னை*
*கேட்டெவரும் பெற்றதில்லை; கிளர்ந்தெழுந்த*
*வஞ்சியர்கள் தலைநிமிர்க!*

கவிஞர் குலோத்துங்கன் வரிகளுக்கேற்ப அரசு ஊழியர்களுக்கும் பொதுமக்களுக்கும் இழைக்கப்படும் அநீக்கெதிராக கிளர்ந்தெழுந் தெழுவோம். போராடி சிறைக்குச் செல்லும் நெஞ்சுரம் கொண்ட புதுமைப் பெண்களை, புரட்சிப்பெண்களை உறுப்பினர்களாகக் கொண்ட நமது தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தில் வீரநடை போட்டு பல வெற்றி களம் காணுவோம்! புதுமைகண்ட புரட்சிப் பெண்களாய் புதுச் சரித்திரம் படைப்போம்!

- **தெ. வாசுகி**

**இரத்த தானம் செய்வோம்!**
**உயிர்களைக் காப்போம்!!**

# காவல் துறை தடியடியை கண்டித்து

# தமிழகம் தழுவிய போராட்டம்

**19**.2.2021 அன்று தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் சென்னையில் நடத்திய பெருந்திரள் முறையீடு போராட்டம் இறுதியில், மாண்புமிகு முதலமைச்சர் முறையீட்டை வாங்க மறுக்கும் பட்சத்தில் முற்றுகை போராட்டமாக நடத்தப்படும் என தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநில மையம் சார்பில் தமிழக அரசுக்கு தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் தமிழக அரசு அழைத்துப் பேசி கோரிக்கைகளை தீர்வு காணாமல், தமிழக அரசின் காவல்துறை, முதல்வரிடம் பெருந்திறள் முறையீடு கொடுக்க பேரணியாகச் சென்ற அரசு ஊழியர்கள் மீது தடியடி மற்றும் தாக்குதலை நடத்தியது.

காவல்துறையை கண்டித்தும், அரசு ஊழியர் சங்க கோரிக்கைகளை நிறைவேற்றிட கோரியும், 23.02.2021ம் தேதி செவ்வாய்க்கிழமை அனைத்து மாவட்டத் தலைநகரங்களில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்துவது என்ற மாநில மைய முடிவின்படி தமிழகம் முழுவதும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. அதன் ஒரு பகுதியாக...

## நாகப்பட்டினம்

வட்டாட்சியர் அலுவலகம் முன்பு மாவட்ட துணைத் தலைவர் மா.ராணி தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் அ.தி.அன்பழகன் விளக்கவுரையாற்றினார். முன்னாள் மாநில துணைத் தலைவர் சு.சிவகுமார் கண்டன உரையாற்றினார். சிஐடியு மாவட்டச் செயலாளர் கே.தங்கமணி, ஓய்வூதியர் சங்க மாவட்டச் செயலாளர் சொ.கிருஷ்ணமூர்த்தி, ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி மாவட்டச் செயலாளர் எம்.காந்தி, ஓய்வுபெற்ற பள்ளி கல்லூரி ஆசிரியர் நலச்சங்க மாவட்டச் செயலாளர் எம்.என்.பக்கிரிசாமி, நாகை தொழிற்சங்க கூட்டமைப்பு பொருளாளர் வி.பாலசுப்பிரமணியன் உள்ளிட்ட தோழமைச் சங்க தலைவர்கள் மற்றும் துறைச் சங்க நிர்வாகிகள் வாழ்த்தி பேசினர். மாவட்டப் பொருளாளர் ப.அந்துவன்சேரல் நன்றி கூறினார்.



## கிருட்டினகிரி



மாவட்ட ஆட்சியரகம் எதிரில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட தலைவர் பி.சந்திரன் தலைமை தாங்கினார். மாவட்ட செயலாளர் எஸ்.நடராஜன் விளக்கவுரையாற்றினார். IBEA மாநில நிர்வாகி எஸ்.ஹரிராவ் வாழ்த்துரை வழங்கினார். மாவட்ட பொருளாளர் தேவராஜ் நன்றி கூறினார்.

## கடலூர்




பொது பணித்துறை அலுவலக வளாகத்திற்குள் மாவட்ட தலைவர் டி.இரவிச்சந்திரன் தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட நிர்வாகிகள் இராம.வெங்கடாஜலபதி, கு.கவியரசு , கே.இரவி முன்னிலை வகித்தனர். மாவட்ட செயலாளர் எல்.அரிகிருஷ்ணன் கோரிக்கை விளக்கவுரையாற்றினார் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் தமிழ்நாடு அனைத்துத் துறை ஓய்வூதியர் சங்க மாவட்ட துணை தலைவர் கருணாகரன், சமூக நலத்துறை பணியாளர் சங்க மாவட்ட செயலாளர் பா.ஆசைதம்பி, பொதுணித் துறை கணக்கு மற்றும் ஆட்சி அலுவலர் சங்க மாவட்ட தலைவர் திரு.அருள், தேசிய நெடுஞ்சாலைத துறை சாலை பணியாளர் சங்க மாவட்ட செயலாளர் என்.ராமர் ஆகியோர் வாழ்த்தி பேசியதும் மாநில பொதுச் செயலாளர் ஆ.செல்வம் கண்டனவுரையாற்றி நிறைவு செய்தார். இறுதியாக மாவட்ட பொருளாளர் எஸ்.வெங்கடேசன் நன்றி கூறினார்.

## நீலகிரி



உதகை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற ஆர்பாட்டத்தில் மாவட்ட தலைவர் முத்துகுமார் தலைமையேற்றார். வருவாய் துறை அலுவலர் சங்க மாவட்ட தலைவர் சிவக்குமார், தோட்டக்கலை பண்ணை பணியாளர் சங்கத்தின் மாவட்ட இணைச் செயலாளர் ராணி, எல்ஐசி ஊழியர் சங்கத்தின் சார்பில் கோபால், தொழில்நுட்ப ஊழியர் கூட்டமைப்பு சார்பில் கெர்சோம் ஆகியோர் வாழ்த்தி பேசினர். மாவட்ட பொருளாளர் ஆனந்தன் கோரிக்கை விளக்கவுரையாற்றினர். சிஐடியு மாவட்ட பொறுப்பாளர் ராஜேந்திரன் கண்டனவுரையாற்றினார். வருவாய் துறை அலுவலர் சங்க மாவட்ட பொருளாளர் கந்தசாமி நன்றி கூறினார்.




மதுரை



புதுக்கோட்டை




திருச்சி




செங்கல்பட்டு




தூத்துக்குடி



தருமபுரி




விருதுநகர்



கரூர்




திருவண்ணாமலை

# மார்ச் 18: பாரிஸ் கம்யூன் எழுச்சி

## உலகில் முதலாவது கம்யூனிசப் புரட்சியின் தாயகம் பிரான்ஸ்

**1871**ம் ஆண்டு, மார்ச் மாதம் தோன்றிய பாரிஸ் கம்யூன், மே மாதம் பிரெஞ்சு இராணுவத்தினால் கொடூரமாக அழித்தொழிக் கப்பட்டது. மூன்று மாதங்களுக்குக் குறைவான காலமே தாக்குப் பிடித்தாலும், உலக வரலாற்றில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை உண்டாக்கியது. உலகில் உழைக்கும் வர்க்க மக்களின் பொதுவுடைமைப் புரட்சி சாத்தியமே என்பதை நிரூபித்தது. பாரிஸ் உழைக்கும் வர்க்கத்தினரின் புரட்சியை, பல்வேறுபட்ட புரட்சிகர சக்திகள் வழிநடத்தின. அனார்க்கிஸ்ட்கள், மார்க்சிஸ்டுகள், லிபரல்கள் போன்ற பல்வேறு வகையிலான சித்தாந்தங் களைப் பின்பற்றினாலும், பாட்டாளி வர்க்கம் அதிகாரத்தைக் கைப்பற்றுவதை நோக்கமாகக் கொண்டிருந்தனர்.

26 மார்ச்சில், உழைக்கும் வர்க்கப் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒரு கம்யூன் (பொதுவுடைமை) அரசாங்கம் உருவாக்கப் பட்டது. 28 மார்ச்சில் "பாரிஸ் கம்யூன்" பிரகடனம் செய்யப்பட்டது. மக்கள் பிரதிநிதிகள் நேரடி ஜனநாயகத் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்டனர். உலக வரலாற்றில் முதல் தடவையாக, அடிமட்டத் தொழிலாளர் களும், அரசாங்கத்தில் அங்கம் வகித்தனர். ஒரு புதிய சமத்துவ சமுதாயம் உருவானது. உழைக்கும் மக்கள் அனைவருக்கும் சமமான ஊதியம் வழங்கப்பட்டது. முந்திய சமூகத்தில், அமைச்சர், மருத்துவர், என்று உயர்ந்த அந்தஸ்தில் இருந்தவர்களும், ஆலைத் தொழிலாளிக்குச் சமமான சம்பளம் பெற்றனர். உயர்ந்த பட்ச சம்பளம், ஆறாயிரம் பிராங்குகள் என்று தீர்மானிக்கப்பட்டது.

அந்தக் காலத்தில், பிரான்சுக்கும், ஜெர்மனிக்கும் இடையில் நடந்த யுத்தத்தின் விளைவாகத்தான் பாரிஸ் கம்யூன் புரட்சி வெடித்தது. அன்று பிரஷ்யப் பேரரசு என்று அழைக்கப்பட்ட ஜெர்மனியப் படைகள், பாரிஸ் மாநகருக்கு வடக்கே இருந்த பிரதேசங்களைக் கைப்பற்றியிருந்தன. பிரெஞ்சு இராணுவம் பாரிசின் தெற்குப் பகுதியில் நிலை கொண்டிருந்தது. பிரெஞ்சு அரசாங்கம், வெர்சேய் நகரினைத் தற்காலிகத் தலைநகராக்கி, அங்கிருந்து இயங்கிக் கொண்டிருந்தது. பிரான்சு, ஜெர்மனிக்கு இடையிலான போர் நிறுத்தத்தின் பின்னர், பாரிஸ் நகரைச் சேர்ந்த, படையினரின் ஆயுதங்களைக் களைய முயற்சித்த காரணத்தினால் தான் புரட்சி வெடித்தது.

உலகில் உள்ள எல்லா நாடுகளிலும் இருப்பதைப் போல, பாரிஸ் நகரிலும், பெரும்பாலும் பாட்டாளி வர்க்க இளைஞர்கள் தான், இராணுவத்தில் சேர்ந்து இருந்தனர். பாட்டாளி வர்க்கத்தின் கைகளில் ஆயுதங்களை விட்டு வைப்பது, தனக்கு ஆபத்தானது என்று பிரெஞ்சு பூர்ஷுவா அரசு நினைத்தது. அவர்கள் பயந்தது மாதிரியே நடந்தது. பிரெஞ்சு பூர்ஷுவா வர்க்கத்தினால் தேசியவாத வெறியூட்டப்பட்டிருந்த இராணுவமாக இருந்தாலும், பாரிஸ் நகரைச் சேர்ந்த வீரர்கள் வர்க்க விழிப்புணர்வு கொண்டவர்களாக இருந்தனர். அதனால் தான், பாரிஸ் புரட்சி வெற்றி பெற்றது. பாரிஸ் கம்யூன் உருவானதும், தொழில் முறை இராணுவம் கலைக்கப்பட்டது. அதற்குப் பதிலாக, ஒரு மக்கள்படை உருவானது. வயது வந்த அனைத்துக் குடிமக்களின் கைகளிலும் ஆயுதங்கள் வழங்கப்பட்டன.

பாரிஸ் கம்யூன், மதத்தையும், அரசையும் பிரித்தது. மதத்திற்கு வழங்கப்பட்ட உயர்ந்த அந்தஸ்து இரத்து செய்யப்பட்டது. மத நிறுவனங்களின் சொத்துக்கள் மக்கள் மயமாக்கப்பட்டன. கல்விக் கூடங்கள், அலுவலகங்களில் மாட்டப்பட்டிருந்த சாமிப் படங்கள் அகற்றப்பட்டன. பாடசாலைகள், பணியிடங்களில் பிரார்த்தனை செய்யும் வழமை அகற்றப்பட்டது. அவற்றைவிட, முந்தைய அரசாங்கம் வைத்திருந்த, பிரெஞ்சு பேரினவாதத்தைப் பறை சாற்றும் சின்னங்கள் அகற்றப்பட்டன. பேரினவாதம், தேசியவாதம், இனவாதம் எதற்குமே அங்கே இடம் இருக்கவில்லை. பாரிஸ் கம்யூன் என்பது தேசிய அரசு அல்ல. அது ஒரு உலக மக்களின் அரசாங்கம். அதிலே சில வெளிநாட்டவர்களும் அங்கம் வகித்தனர். உலகில் எந்த நாட்டைச் சேர்ந்தவராக இருந்தாலும், உழைக்கும் மக்கள் என்ற பொதுத் தன்மை அவர்களை ஒன்றிணைத்தது.

அன்றைய போரில் வெற்றி, தோல்வி காண முடியாமல், போர் நிறுத்தம் செய்து கொண்ட ஜெர்மனியும், பிரான்சும், பாரிஸ் கம்யூன் புரட்சியின் பின்னர் ஒன்று சேர்ந்தன. அப்போது ஜெர்மன்-பிரெஞ்சு ஆளும் வர்க்கங்களின் வர்க்க உணர்வு விழித்துக் கொண்டது. உலகில் தோன்றிய முதலாவது பாட்டாளி வர்க்கப் புரட்சியை நசுக்குவதற்காகக் கைகோர்த்துக் கொண்டனர். ஜெர்மன் உதவியுடன் படை நகர்வுகளை மேற்கொண்ட பிரெஞ்சு இராணுவம், மே மாதம் பாரிஸ் கம்யூனின் ஆட்சிக்குட்பட்ட பகுதிகளைக் கைப்பற்றியது.

பிரெஞ்சு இராணுவ நடவடிக்கை காரணமாக தப்பிச் செல்ல முயற்சிக்கும் புரட்சியாளர் களை, ஜெர்மனி தடுத்து நிறுத்தியது. அவர்களைத் தப்ப விடவேண்டாம் என்று வடக்கே நிலை கொண்டிருந்த ஜெர்மன் படைகளுக்கு உத்தரவிடப்பட்டிருந்தது. அதனால், பாரிஸ் கம்யூனில் இருந்த யாரும் தப்பியோட முடியாதவாறு, நாலாபக்கமும் சுற்றி வளைக்கப்பட்டனர். அடுத்து அங்கே ஒரு இனப் படுகொலை அரங்கேறியது. பெண்கள், குழந்தைகள் என்று பேதம் பாராது, அனைவரும் தெருத் தெருவாக, வீடு வீடாக சுட்டுக் கொல்லப்பட்டனர். அன்றைய இனப் படுகொலையில், சுமார் முப்பதாயிரம் நிராயுதபாணிகளான பொது மக்கள், பிரெஞ்சு இராணுவத்தினால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இன்று பாரிஸ் கம்யூனை நினைவுகூரும் இடங்கள் யாவும் அழிக்கப்பட்டு விட்டன.



தற்போது எஞ்சியிருப்பது, பாரிஸ் நகரில் உள்ள கம்பட்டா சுடலையில் உள்ள, மதில் சுவர் ஒன்று மட்டுமே. அந்த மதில் சுவருக்கு முன்னால் வைத்து, இறுதியாக பல நூறு புரட்சியாளர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். அந்த இடத்தில், "பாரிஸ் கம்யூனில் இறந்த வர்களின் நினைவாக" என்று எழுதப் பட்டுள்ளது.

பாரிஸ் கம்யூனின் நடைமுறைத் தவறுகளை விமர்சித்து, கார்ல் மார்க்ஸ் "பிரான்சின் உள்நாட்டுப் போர்" என்ற தலைப்பில் ஒரு நூலை எழுதினார். அந்த நூலில் இருந்து பெறப்பட்ட படிப்பினைகளின் அடிப்படை யில் தான், லெனின் ரஷ்யாவில் போல்ஷெவிக் புரட்சியை வழிநடத்தினார். சீனப் புரட்சிக்கும், பாரிஸ் கம்யூன் ஒரு உந்து சக்தியாக இருந்துள்ளது.

- **பெரணமல்லூர் சேகரன்**

## தோழர் தா.பாண்டியன் அவர்களுக்கு கண்ணீர் அஞ்சலி



இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முதுபெரும் தலைவரும், சிறந்த தொழிற்சங்கத் தலைவர், சிறந்த பேச்சாளர், எழுத்தாளர் மற்றும் பத்திரிகை ஆசிரியர் என பல்வேறு பரிணாமங்களைக் கொண்ட அருமைத் தோழர் தா.பாண்டியன் உடல்நலக் குறைவால் 26.02.2021 அன்று இயற்கை எய்தினார். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் அன்னாருக்கு கண்ணீர் அஞ்சலியும், வீர வணக்கமும் செலுத்துகிறது.



மதுரையில் நடைபெற்ற இறுதி நிகழ்ச்சியில் நமது சங்கத்தின் பொதுச் செயலாளர் ஆ.செல்வம், மாவட்டச் செயலாளர் க.நீதிராஜா மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

# சரித்திரத்தின் சக்கரங்களை சுழற்றிய போராட்டம்

*நல்ல குறிக்கோளை அடைவதற்காக தொடர்ந்து முயலும் மனிதனின் செயல்பாடே பிற்காலத்தில் அனைவரும் படிக்கும் வரலாறாக மாறுகிறது.*

*- கார்ல் மார்க்ஸ்*

முடிவெடுத்துவிட்டோம்.

முடிவை அமல்படுத்த வேண்டிய நாளும் வந்துவிட்டது.

புதிய வடிவமாக இருக்கிறதே.......!

தொடங்குவது தெரியும். எப்படி தொடர்வது என்பதுதான் சவால்.

பொதுவாக ஒரு போராட்டம் இன்னொரு போராட்டம் போல் இருப்பதில்லை. தொடக்க மும், முடிவும், பலாபலன்களும் மாறுபட்டே இருக்கும். வரலாற்றில் இடம்பெற்ற 1947 இல் அரசு ஊழியர்கள் நடத்திய போராட்டமும் 1988இல் நடைபெற்ற போராட்டமும் ஒன்று போல் இல்லை. 2002இல் நடைபெற்ற போராட்டத்திற்கும் 2003இல் நடைபெற்ற போராட்டத் திற்கும் நிறைய வேறுபாடுகள் உண்டு. 2011, 2016, 2017, 2019இல் நடைபெற்ற போராட்டங்களும் மாறுபட்ட அனுபவங்களையும், புதுப்புது முடிவுகளையும் வழங்கியுள்ளன.

‘களத்தில் நின்று கற்றுக்கொண்டு களத்தையே வழிநடத்தலாம்‘ என்று முன்னோர்கள் சொன்னதை நினைத்துக் கொண்டே துணிச்சலாக போராட்டத்தைத் தொடங்கினோம்.

## நம்பிக்கை தந்த நாட்கள்

2020, டிசம்பர்20 அன்று தருமபுரியில் நடைபெற்ற மாநில பிரதிநிதித்துவப் பேரவையின் அறைகூவல் தீர்மானமான,

• புதிய பென்சன் திட்டம் ரத்து

• சத்துணவு, அங்கன்வாடி, வருவாய் கிராம உதவியாளர், எம்ஆர்பி செவிலியர், ஊர்புற நூலகர்கள், கணினி இயக்குநர்கள், தினக்கூலி, கான்ட்ராக்ட், அவுட்சோர்சிங் உள்ளிட்ட பிரிவினருக்கு வரையறுக்கப்பட்ட ஊதிய விகிதம்

• சாலைப்பணியாளர்களுக்கு 41 மாத காலத்தை வரன்முறைபடுத்துவது

• அரசுத்துறைகளில் உள்ள நான்கரை லட்சம் காலிப்பணியிடங்களை நிரப்புதல்

• முடக்கப்பட்ட அகவிலைப்படி, சரண்டர் மீண்டும் வழங்கிடக்கோருதல் உள்ளிட்ட

கோரிக்கைகளை மாண்புமிகு தமிழக முதல்வர் அரசு ஊழியர் சங்க மாநில நிர்வாகிகளை அழைத்துப்பேசி தீர்வுகாண வேண்டும், இல்லையேல் 2021, பிப்ரவரி02 முதல்,‘ தொடர் மறியல் சிறை நிரப்பும் போராட்டம்‘ நடத்துவது என்ற முடிவின்படி போராட்டம் துவங்கியது.

## நிஜமான போராட்டம் ஆரம்பம்

கோரிக்கையின்பால் ஈர்க்கப்பட்ட ஊழியர்கள் காலை 10.00 மணிக்கு கிருட்டினகிரி புதிய பேருந்து நிலையம் அருகே திரள ஆரம்பித்துவிட்டார்கள். பெண் ஊழியர்கள் இளம் ஊழியர்களின் பங்கேற்பு கூடுதலான ஊக்கத்தை கொடுத்தது.

அதிரும் கோஷங்கள், வெடிக்கும் உரை வீச்சுகள், பேனர், கொடிகளுடன் சாலையில் அமர்ந்தும், படுத்தும் மறியல், காவல்துறை கைது, வாகனங்களில் ஏற்றப்பட்டு வசதி குறைவான மண்டபத்தில் அடைத்து, முகவரி பதிவுகள் முடிந்து பிற்பகலில் பொட்டல உணவு என்ற வழக்கமான சம்பிரதாயங்க ளுடன்தான் மாலை 05.30 மணிவரை தொடர்ந்தது.

## புதிய வரலாறு படைத்த போராட்டம்

மாலை 05.45 மணிக்கு காவல் ஆய்வாளர் அரசு வாகனத்தில் மிடுக்குடன் மண்டப மைதானத்திற்குள் வந்திறங்கினார். காவலர்களை அழைத்து வெளிப்புற கதவுகளை திறக்கச் சொன்னார். கதவுகள் அகலமாக திறக்கப் பட்டன.

‘உங்களை விடுதலை செய்கிறேன். நீங்கள் போகலாம்‘ என்றார் காவல் ஆய்வாளர். அவர் சொன்னதை யாரும் காதில் வாங்கிக்கொள்ளவுமில்லை. அதை ஒரு பொருட்டாகவும் மதிக்கவில்லை.

வழக்கமான மறியல் போராட்டத்தில் 05.00 மணிக்கெல்லாம் இரும்புக் கதவுகள் எப்போது திறக்கும் என்று வாசல் பக்கம் செல்பவர்கள்......

இன்று திறந்துவிடப்பட்ட கதவுகளை ஒருவர்கூட திரும்பிப்பார்க்கவில்லை. காவல் ஆய்வாளர் திகைத்துப்போனார். மாவட்ட நிர்வாகிகளை அழைத்துப் பேசினார். ‘நீங்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளீர்கள். வெளியே போகலாம்‘ என்றார்.

அவரிடம் சொன்னோம். ‘மாண்புமிகு தமிழக முதல்வர் அரசு ஊழியர் சங்க நிர்வாகிகளையும், ஜாக்டோஜியோ தலைவர் களையும் அழைத்துப்பேசி கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும். இல்லையென்றால், கோரிக்கை களை ஏற்றுக்கொண்டு அதற்கான அரசாணைகளை வெளியிட வேண்டும். இதில் ஏதாவது ஒன்று நடக்க வேண்டும். இல்லை யென்றால் எங்கள் போராட்டம் தொடரும். நாங்கள் யாரும் வெளியே செல்லமாட்டோம்‘ என்று உறுதியோடு சொன்னோம்.

அப்போது காவல் அதிகாரி எங்களுக்குப் பின்னால் பார்வையை செலுத்தினார். எங்களுக்குப் பின்னால் 50 அடி தூரத்தில் மிக மிக அமைதியாக தரையில் அமர்ந்து கைது செய்யப்பட்ட தோழர்கள் போராட்டத்தை தொடர்ந்து கொண்டிருந்தனர். ஒருவர்கூட அசையவில்லை.

இப்பொழுது நினைத்தாலும் அந்தக் காட்சி உடல் சிலிர்க்க வைக்கிறது. இது தான் இந்தப் போராட்டம் வரலாற்றில் பதிவு செய்த பொன்னான தருணம்.

## மிரட்டல்கள் ஆரம்பம்

காவல்துறை தங்களுக்கே உரியமுறையில் மிரட்ட தொடங்கியது. 'உங்களை ரிமாண்ட் செய்துவிடுவேன். Specific-காக வழக்கு போடப்படும், குறிப்பிட்ட சிலரை மட்டும் தேர்ந்தெடுத்து கைது செய்வேன், Charge Sheet வழங்குவேன் என்றெல்லாம் பேசிப் பார்த்தார்.

'எதுவும் செய்துகொள்ளுங்கள்.எங்கள் கோரிக்கைகள் நிறைவேறும்வரை போராட்டம் தொடரும்' என்று உறுதியாக கூறிவிட்டோம்.

காவல்துறை அடுத்த நிலைக்குச் சென்றது. மண்டப முதலாளியிடம் தனியாக பேசி கழிவறைக்கு வரும் தண்ணீர் நிறுத்தப்பட்டது. சிறிது நேரம் கழித்து மின்சாரமும் துண்டிக்கப்பட்டது.

பெண் ஊழியர்கள் உட்பட அனைவரும் சிரமத்திற்கு உள்ளாகிக்கொண்டிருந்தனர்.

## ஆயுதங்கள் எடுத்தோம்

'நாம் எந்த ஆயுதத்தை எடுப்பது என்பதை எதிரிதான் தீர்மானிக்கிறான்' என்று மூத்தோர்கள் சொல்வார்கள். அந்த இருளில் ஆயுதங்களை தேடி எடுத்துக்கொண்டோம். ஆயுதங்களை பிடித்துக்கொண்டு அணிவகுத்து வெளியே சென்றோம். பேனருக்குப் பின்னால் கொடிகளுடன் (அதுதானே நம் ஆயுதம்) புறப்பட்ட நம்மை நோக்கி பதறியபடி காவல் அதிகாரி வந்தார்.

'எங்க கிளம்பிட்டீங்க?'

'துவங்கிய இடத்திற்கே திரும்புகிறோம்.' என்று கொஞ்சம் தத்துவம் போலத்தான் பேசினோம்.

'மீண்டும் புதிய பேருந்து நிலையம் அருகில் மறியல் செய்யப்போகிறோம்' நாங்கள்.

'கொஞ்சம் வெய்ட் பண்ணுங்க. மேலிடத்தில் பேசிவிட்ட வருகிறேன்' பதற்றத்துடன் காவல் அதிகாரி.

'முடிந்தால் முதல்வரிடம் பேசுங்கள்'நாங்கள்.

சிறிது நேரம் கழித்து, 'நீங்கள் மண்டபத்திற் குள்ளேயே செல்லுங்கள். தண்ணீரும் மின்சாரமும் வந்துவிடும்' என்ற பிறகு மீண்டும் போராட்டம் தொடர்ந்தது.

ஒன்பது நாட்களும் இப்படி காவல்துறை யோடு போராடிக்கொண்டே கோரிக்கை களுக்கான போராட்டத்தை தொடர்ந்தோம்.

## பெண் தோழர்கள் காட்டிய உறுதி

உறுதிமிக்க பெண் தோழர்களின் பங்கேற் போடு சுட்டெரிக்கும் வெயிலிலும், கொட்டும் பணியிலும், கொசுக்கடியிலும் பகலிலும், இரவிலும் தொடர் மறியல் சிறை நிரப்பும் போராட்டம் நடைபெற்றது. இம்முறை விடுமுறை நாட்களான பிப்ரவரி 06, 07 சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் போராட்டம் நடைபெற்றது வரலாற்றில் குறிப்பிடத்தக்க நிகழ்வு. அந்த இரண்டு விடுமுறை நாட்களிலும் ஊழியர் பங்கேற்பு சற்று கூடுதலாக இருந்ததும் குறிப்பிடத்தக்கது.

## மறியலில் ஒரு நாள்

தொடர்மறியல் சிறைநிரப்பும் போராட்த் தின் 3ஆம் நாள் 11.45 மணிக்கு சாலையில் அமர்ந்து மறியல்.

தகிக்கும் வெயில்.....

ஒரு பெண் தோழர்....

சத்துணவு சமையலர்....

58 வயதை நெருங்கிக்கொண்டிருக்கிறார்...

பெயர் திருமதி கெம்பம்மா.

மறியல் செய்யும் தோழர்களுக்கு நடுவில் தார் சாலையில் அமர்ந்து மறியல் செய்கிறார்.

ஒரு காவல் அதிகாரி அவரிடம் வந்து,

'அம்மா வெயில் அதிகமாக இருக்கிறது. நீங்கள் தாங்க மாட்டீர்கள். மயக்கம் வந்துவிடும். தனியே வந்துவிடுங்கள். நிழலில் அமர்ந்து கொள்ளுங்கள்' என்று சொன்னார்.

அதற்கு அந்த மூத்த சகோதரி என்ன சொன்னார் தெரியுமா?

'எங்கள் தலைவர் சொல்லும்வரை இங்கிருந்து நகர மாட்டேன். எனக்கு மயக்கம் வந்தாலும் பரவாயில்லை.'என்று தெளிவாக கூறிவிட்டார். அந்த காவல் அதிகாரி திரும்பிப்போய்விட்டார்.

திருமதி. கெம்பம்மா என்ற அந்த சகோதரிக்கு கைது செய்யப்பட்ட அந்த மண்டபத்திலேயே அவரை பாராட்டும் விதமாக புதிய புடவை ஜாக்கெட் போர்த்தப்பட்டு பலத்த கரவொலி மூலம் வாழ்த்து தெரிவிக்கப்பட்டது.

குக்கிராமத்தில் இருக்கும் ஒரு ஊழியர் கூட நமது சங்கத்தின் கட்டுப்பாட்டை புரிந்துகொண்டு அதை கடைபிடிக்கிறார். நமது போராட்டத்தின் நியாயத்தை உள்வாங்கிக்கொண்டு நம்மோடு போராட்ட களத்தில் நிற்கிறார் என்றால்.....

நமது சங்கம் நிலைத்துநின்று வளரும்

நமது கோரிக்கைகள் வெற்றிபெறும்.

ஒன்றுபடுவோம். போராடுவோம். வெற்றிபெறுவோம்.

- **ஆர்.நடராஜன்,**
*கிருட்டினகிரி*

Finance (CMPC) Department
Secretariat
Chennal600 009

Letter No 44119/ CMPC /2020-4, dated: 25-02-2021

From
Thiru **S.KRISHNAN**, I.A.S.,
Additional Chief Secretary to Government

To
The Principal Secretary / Commissioner of Treasuries and Accounts
Amma Complex, 3 Floor, Veterinary Hospital Campus
571, Anna Salai,
Nandanam, Chennal -600 035.

Sir

Sub : Pay Grievance Redressal Committee 2019 - Revision of scales of pay of 52 calegorias in 20 departments - Implementation of the recommendations of the Pay Grievance Redressal Committee- Clarifications sought on Personal Pay-Instructions - Issued -Regarding

Ref : 1. GO(Ms) No 45, Finance (Pay Cell) Department, Dated: 10.02,2011.
2. GO.(Ms).No 242 Finance (Pay Cell) Department, Dated: 22.07 2013.
3. GO(Ms). No. 303, Finance (Pay Cell) Department, Dated. 11.10.2017.
4 G.O.(Ms) Nos. from 399 to 422, Finance (Pay Cell) Department, Dated: 12.11.2020.
5. G.0.(Ms).Nos. from 417 to 422, Finance (Pay cell) Department, Dated: 12.11.2020.
6 Letter Received from the Principal Secretary Commissioner of Treasuries and Accounts Rc No 35116/ D2/ 2020, Dated: 07.12.2020.

*****

I am to invite your attention to the reference cited.

2. I am to state that orders have been issued in the reference fourth cited, implementing the recommendalions of Pay Grievances Redressal Committee, 2019 with reference to revision of Pay Scales of 52 categories of various posts in 20 Departments.

3. I am to state that considering the arduous duties and responsibilities attached to the posts of Tahsildars / Block Development Officers, the Governmen has sanictioned the "Personal Pay" of Rs. 1000/- pm notionally w.e.f. 01.02.2011 in the reference frst cited. Instead of "Parsonal Pay" for the posts of Tahsidars / Block Development Officers / Inspector of Police / Forest Rangers a "Special Allowance" of Rs 1000/- had been sanctioned in the reference second cited. Further, a Standalone Personal Pay to be shown separately in the fixation of pay of Rs 2600/- pm w.e.f. 01.01.2016 for the above said posts have been sanctioned in the reference fifth cited.

4 In the reference sixth cited, clarification has been sought for as to whether the "Personal Pay / Standalone Personal Pay" ordered in the G.O. (Ms). No. 417 to 420, Finance (Pay Cell) Department, dated: 12.11.2020 are to be taken into account for Increment, Promotion, Dearness Allowance and Terminal Benefits.

5 I am to clarify the following -

| Sl. No. | Clarification sought for | Clarifications issued |
|---|---|---|
| 1. | Whether the Personal Pay is eligible for Annual Increment? 31.12.2015 The Standalone Personal Pay sanctioned at Rs 2600/- is not eligible for Annual Increment | The Personal Pay sanctioned at Rs 1000/- is eligible for Annual Increment notionally w.e.f 01 01 2016 |
| 2. | Whether the Personal Pay has to be merged with Basic Pay on promotion | The Personal Pay sanctioned at Rs. 1000/- is eligible for merger with the basic pay on promotion notionally with effect from 01.02.2011 upto 31.12.2015. As per the Tamil Nadu Revised Scale of Pay Rules 2017, the Pay alone shall be taken for fixation of pay Hence, the Stand alone Personal Pay of Rs 26001- shall not be taken into account for merger with the basic pay on promotion as the said Personal Pay has been sanctioned for considering the arduous duties and responsibilities attached to the posts as long as the person |

| | | |
|---|---|---|
| | | holding the said posts and perform his / her duties thereon only |
| 3. | Whether the Personal Pay is eligible for calculation of pensionery benefits? | No |
| 4. | Is Personal Pay eligible for Dearness Allowance and other allowances? | No |
| 5. | Whether the Personal Pay is eligible for all Tahsildars Block Development Officers or to be restricted forfield level Tahsildars / Block Development Officers. | Personal Pay is eligible for all Tahsildars / Block Development Officers / Inspector of Police / Forest Rangers. |

Yours faithfully,

for Additional Chief Secretary to Government.

ABSTRACT

Public Services - Age of Superannuation of Government servants, teachers, etc - Increased to 10 years - Orders - Issued

PERSONNEL AND ADMINISTRATIVE REFORMS (S) DEPARTMENT

G.O.(MS)No.29 Datod: 25.02.2021

*சார்வரி, மாசி - 13,*

*திருவள்ளுவர் ஆண்டு 2052*

Read:

1. G.O.(Ms) No.532, Personnel and Administrative Reforms (Personnel - M) Department, dated 25.04.1979
2. G.O.(Ms) No 51, Personnel and Administrative Reforms (S) Department, dated 07.05.2020.
3. Announcement made by the Hon'ble Chief Minister under Rule 110 on the floor of the Tamil Nadu Legislative Assembly on 25.02.2021

**ORDER:**

During the Interim Budget session 2021-2022, the Hon'ble Chief Minister has made an announcement on the floor of the Tamil Nadu Legislative Assembly on 25.02.2021 inter-alia to increase the retirement age of Tamil Nadu State Government employees from 59 to 60 years and the orders would be applicable to employees of the Government and Government Aided Educational Institutions, Legal and Constitutional Bodies, Public Sector Undertakings, Local Bodies, Commissions, Boards and Societies. The Hon'ble Chief Minister also said that all those who are in service and those who would retire on 31.05.2021 would be covered under the announcement.

2. Accordingly, the Government orders to increase the age of superannuation of Government servants / teachers from 59 years to 60 years. This will apply to all those who are in service as on date and due to retire on superannuation from 31.05.2021.

3. This order shall also be applicable to all teaching and non-teaching staff working in aided educational institutions and employees of all Constitutional / Statutory Bodies, Public Sector Undertakings including all State Corporations, Local Bodies, Boards, Commissions and Societies

4. Necessary amendments to Tamil Nadu Fundamental Rules will be issued separately.

(BY OF OF THE GOVERNOR)

S.SWARNA,

PRINCIPAL SECRETARY TO GOVERNMENET.

SECTION OFFICER.

## அரசு ஊழியர்கள் ஓய்வு வயதை 60ஆக உயர்த்தி உத்தரவிட்டுள்ள தமிழக அரசின் ஆணையைக் கண்டித்து ஊடக செய்தி

# குதிரை குப்புறத் தள்ளியதோடு மட்டுமல்லாமல் குழியும் பறித்த கதைதான் மீண்டும் தமிழக இளைஞர்களுக்கு எடப்பாடி அரசு இழைத்திருக்கும் சமூக அநீதி

## அரசு ஊழியர்கள் ஓய்வு வயதை 60ஆக உயர்த்தி உத்தரவிட்டுள்ள தமிழக முதல்வரின் நடவடிக்கை வேலைவாய்ப்புக்காகக் காத்திருக்கும் இளைஞர்களின் எதிர்காலத்தை குழிதோண்டிப் புதைக்கும் ஏற்பாடு

## தமிழக அரசு சமூக நீதிக்கு எதிரான இந்த நடவடிக்கையை திரும்பப்பெற வேண்டும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் வலியுறுத்தல்

இந்தியா ஏற்கெனவே சிக்கிக் கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி. கொரோனா கால பொது முடக்கம் ஆகியவற்றால் ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு அரசாங்கங்கள் கையாள வேண்டிய ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை புறந்தள்ளி விட்டு ஒரு சந்ததியின், ஒரு சமூகத்தின் எதிர்காலத்தையே இருட்டு குகைக்குள் தள்ளாடும் நடவடிக்கைதான் முதல்வர் எடப்பாடி அவர்கள் இன்று சட்டமன்றத்தில் அறிவித்திருக்கும் அரசு ஊழியர்கள் - ஆசிரியர்களின் பணி ஓய்வு வயது 60 ஆக உயர்த்தியிருப்பது.

சென்ற வருடமே தமிழக அரசு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் ஓய்வுபெறும் வயதை 58லிருந்து 59ஆக உயர்த்தியபோது தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கடுமையான கண்டனத்தைத் தெரிந்திருந்தது. இந்த நடவடிக்கையானது எந்த வகையிலும் மாநில அரசின் நிதி நிலையினை மேம்படுத்தாது என்பதோடு மட்டுமல்லாமல், இன்னும் ஓராண்டிற்கு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் தயவு ஓய்வு பெற்றால் கொடுக்க வேண்டிய ஓய்வூதியப் பலன்களை தள்ளிப்போடும் ஒரு தற்காலிக நடவடிக்கை என்பது தான் யதார்த்தம். இதன்விளைவாக அரசு வேலைக்காக காத்திருக்கும் இளைஞர்களின் எதிர்காலத்தை புதிர்காலமாக மாற்றியுள்ளது. தற்போது 30 வயதை எட்டவிருக்கும் இளைஞர்கள் தங்களின் அரசு வேலைக்கான வாய்ப்பை வருவாயையும் தவற விடும் நிலை எழுந்துள்ளது. இதுபோக ஏற்கனவே பணியில் உள்ள ஊழியர்கள் இன்னும் ஒரு ஆண்டுக்கு பணி உயர்வு பெறாமல் காத்திருக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

தமிழக அரசின் இந்தப்போக்கானது இன்னும் ஓராண்டிற்கு இளைஞர்களின் எதிர்காலத்தை முடக்கிப் போடுவதுடன் தமிழ்நாடு அரசுப் பணியாளர்

தேர்வாணையம் மேலும் ஓராண்டிற்கு எந்தவித பணி நியமன நவடிக்கையினையும் மேற்கொள்ள இயலாத சூழ்நிலையினை உருவாக்கியுள்ளது. இது கிட்டத்தட்ட 2003ல் தமிழக அரசு பிறப்பித்த வேலை நியமன தடைச் சட்டத்தன் இன்னொரு வடிவமாகவே கருத வேண்டியுள்ளது.

ஏற்கெனவே அரசு அலுவலகங்களில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்பிட தமிழக அரசு சுணக்கம் காட்டிவரும் நிலையில் இந்த அறிவிப்பானது மேலும் இளைஞர்களை தவிப்பில் ஆழ்த்திவிடும் என்பதில் ஐயமில்லை. தமிழக அரசு மத்திய அரசின் கைப்பாவையாக மாறி ஏற்கெனவே அரசுத்துறைகளை தனியார் வசம் ஒப்படைக்கும் நடவடிக்கைக்காக ஓய்வு பெற்ற ஐஏஎஸ் அதிகாரி ஆதிசேஷய்யாவை நியமித்து நடவடிக்கை எடுத்து வரும் நிலையில் தற்போது மேலும் ஓராண்டுக்கு ஓய்வு பெறும் வயதை 59லிருந்து 60ஆக உயர்த்தியிருப்பது இளைஞர்களை வேலைவாய்ப்பற்றவாகளாக மாற்றி சமூக அநீதிகள் பெருக வழிவகை ஏற்படுத்தி விடும் என்பதை தமிழக அரசு உணர வேண்டும். ஓராண்டுக்கு ஏறத்தாழ 30000 அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் ஓய்வு பெறுவதாக கணக்கில் கொண்டபடவ தமிழக அரசு அவர்களுக்கு ஓய்வூதியப் பணப்பலன்களை வழங்க ரூ.6000 கோடி செலவழிக்க வேண்டி வரும். அந்த 6000 கோடி ரூபாய்க்காக இலட்சக்கணக்கான இளைஞர்களின் எதிர்கால வாழ்க்கையையும், சமூக அமைதியையும் கேள்விக் குறியாக்கி விடும். இந்த அறிவிப்பை தமிழக அரசு கைவிட்டு ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளின் மூலம் வருவாய்க்கு வழி தேடவேண்டும்.

இளைஞர்களின் வேலைவாய்ப்பினை காத்திடும் வகையிலும் ஆசிரியர் அரசு ஊழியர்களின் பதவி உயர்வினை பாதுகாக்கும் வகையிலும் அரசு ஊழியர் ஆசிரியர்களின் ஓய்வு பெறும் வயதினை மேலும் உயர்த்தாமல் தமிழக அரசு சமூக நீதியையும் சமூக அமைதியையும் காக்க வேண்டும் என்று தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது. ■

## கண்டன ஆர்ப்பாட்டம் ஒத்திவைப்பு

**25**.02.2021 அன்று சட்டமன்றத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் 110 விதியின்கீழ் அரசு ஊழியர் ஓய்வு பெறும் வயதை 59லிருந்து 60ஆக உயர்த்தி அறிவிப்பு வெளியிட்டார். தமிழக முதல்வரின் இந்த நடவடிக்கை வேலை வாய்ப்புக்காககாத்திருக்கும் இளைஞர்களின் எதிர்காலத்தை குழி தோண்டிபுதைக்கும் ஏற்பாடாகும். மேலும் ஏற்கனவே பணியில் உள்ள ஊழியர்கள் இன்னும் ஓராண்டிற்கு பணி ஓய்வு பெறாமல் காத்திருக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது. தமிழக அரசின் இந்த போக்கானது இன்னும் ஓராண்டிற்கு இளைஞர்களின் எதிர்காலத்தை முடக்குவதுடன் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மேலும் ஓராண்டிற்கு எவ்வித பணி நியமன நடவடிக்கையும் மேற்கொள்ள இயலாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

தமிழக அரசின் சமூக நீதிக்கு எதிரான இந்த நடவடிக்கைக்கு எதிராக தமிழகம் முழுவதும் அனைத்து அரசு அலுவலகங்கள் முன்பு 27.02.2021 அன்று கண்டன ஆர்ப்பாட்டம் நடத்துவதென முடிவாற்றப்பட்டது. தேர்தல் ஆணையத்தின் நடைமுறை விதிகள் அறிவிப்பால் ஒத்திவைக்கப்பட்டது.

# போராட்டத்திற்கான விதை விதைக்கப்பட்ட நாள்

இன்று உலகம் முழுவதும் கொண்டாடப் படும் சர்வதேசப் பெண்கள் தினம் எப்படி தோன்றியது? நிச்சயமாக கொண்டாட்டத்தில் அல்ல போராட்டத்தில் தான் தொடங்கியது. உலகின் அதிசயம் மனித இனம் என்றால், பிரபஞ்சத்தின் அதிசயம் பெண் இனம். பெண்மையும் வலிமையும் ஒருங்கே காணப்படும் ஒரு படைப்பு. என்னதான் படைப்பில் அனைவரும் சமம் என்றாலும் பெரும்பாலான பெண்களுக்கு இடத்தை வழங்கவில்லை, ஆனால் சமூகம் பெண்களுக்கு சமமான இடத்தை வழங்கினாலும், வழங்காவிட்டாலும் பெண்களுக்கு ஆணை விட உயர்ந்த இடத்தையே இயற்கை வழங்கி உள்ளது.



## சர்வதேச பெண்கள் தினம்

கி.பி.1789ம் ஆண்டு பிரெஞ்சுப் புரட்சியின் போது பாரிஸ் பெண்கள் போர்க்கொடி உயர்த்தினர் பெண்களுக்கும் இந்த சமுதாயத்தில் உரிமைகள் பெற வேண்டும் என்றும், உழைப்புக் கேற்ற ஊதியம் 16 மணி நேர வேலையைக் குறைக்க வேண்டும். வாக்குரிமை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்துப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்தப் போராட்டம் ஐரோப்பிய நாடுகளுக்கு பரவியது 1900ஆம் ஆண்டு பெண்கள் வாரிசு விருத்திக் காகவும் வீட்டு வேலைக்காக மட்டுமே இருப்பதாக உணர வைக்கப்பட்டிருந்த காலம் பெண்களின் மனதில் மெல்ல மெல்ல விழிப்புணர்வு ஏற்பட ஆரம்பித்தது. 1907க்குப் பிறகு போராட்டம் தீவிரமானது டென்மார்க் நாட்டின் கோபன்ஹேர் நகரில் 1910ம் ஆண்டு உலக சோசலிச பெண்கள் மாநாடு நடைபெற்றது. அம்மாநாட்டில் சில பெண்கள் சந்திக்கும் அனைத்து பிரச்சனைகளையும் ஆவணப்படுத்த வேண்டும். ஆண்களைப்போல பெண்களுக்கும் வாக்குரிமை வேண்டும். எல்லாவற்றிலும் சமஉரிமை கேட்டு போராட வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேட்டப்பட வேண்டும் என்று கூறினார். ஆனால் எந்த ஒரு தனி தினம் குறிப்பிடவில்லை. பிப்ரவரி 28 பெண்கள் தினம் கொண்டாடப்பட்டது. பிறகு பிப்ரவரி மாதம் கடைசி ஞாயிற்றுக் கிழமை பெண்கள் தினம் கொண்டாடப்பட்டது. இதை 1975 ஆண்டு சர்வதேச பெண்கள் ஆண்டாக அனுசரிக்கப் பட்டது. அதையொட்டி, ஐநா மார்ச் மார்ச் 8ஐ உலக மகளிர் தினமாக அறிவித்தது. இரண்டு ஆண்டுகள் கழித்து 1977ல் இது தொடர்பாக தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. மார்ச் 8ஆம் தேதி மகளிர் தினம் கொண்டாடப்படுகிறது.

பாலின சமத்துவம் என்பது அடிப்படை உரிமை மட்டுமல்ல அது சமூக நீதி. இன்று சர்வதேச மகளிர் தினம் கொண்டாட்டமாக கட்டமைக்கப்படுகிறது. ஆனால் இது கொண்டாடப்படுவதற்காக உருவாக்கப்பட்ட நாள் அல்ல. ஒரு போராட்டத்திற்கான, புரட்சிக்கான விதை விதைக்கப்பட்ட நாள்.

1911ஆம் ஆண்டில் இருந்தே பெண்கள் தினம் கடைபிடிக்கப்பட்டு பாலின சமத்துவம் குறித்து பேசி வந்தாலும் இன்றும் ஒவ்வொரு நாளும் உலகின் ஏதோ ஒரு மூலையில் ஒரு பெண் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாகி கொண்டிருக்கிறார். ஒவ்வொரு நிமிடமும் ஏதோ ஒரு பெண் வார்த்தை வன்முறையினால் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறாள். பணியிடத்தில் சம உரிமைக்காக போராடிக் கொண்டிருக்கிறாள். ஒரு ஆண் இன்னொரு ஆணை வசைபாடும் ஒவ்வொரு வார்த்தையிலும் ஏதோ ஒரு பெண் அவமானப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறாள்.

**உடலுறுதி கொண்ட ஆணைவிட மனவுறுதி கொண்ட பெண் சிறப்பு மிக்கவள்.**

என்பவர் இந்த தேசத்தை கட்டியமைக்கும் வலிமை கொண்டவள். ஒரு பெண் நினைத்தால் எதையும் சாதிப்பாள் என்று சொல்வார்கள் உண்மைதான். பெண்ணின் வைராக்கியம் என்பது

ஆணை விட வலியது. உடல் ரீதியான உறுதியில் ஆண் வலியவன் என்றால் மனரீதியான உறுதியில் வலியவள் பெண். தற்போது பெண்களுக்கு எதிரான சம்பவங்கள் அதிகரித்து வரும் சூழலில் பெண்கள் மனரீதியான அதிகமாக உறுதிசெய்ய வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். அப்படிப்பட்ட மன உறுதிக்கும், வீரத்திற்கும் சான்றாக சுதந்திர போராட்ட வேங்கை பெண்மணி வேலுநாச்சியாரை போன்று மாற வேண்டும்.

## பெண்களின் இன்றைய நிலை

பெண்களின் நிலை இந்தியாவில் முரண்பாடுகள் நிறைந்தது என்றே சொல்ல வேண்டும். ஒருபும் பெண் சிசுக் கொலை நடந்து கொண்டிருக்கும். இன்னொரு புறத்தில் ஏதோ ஒரு வெளிநாட்டில் இந்தியப் பெண்கள் வெற்றிக்கனி பறித்துக் கொண்டிருக்கின்றார்கள் பெண் பிரதமர், ஒரு பெண் ஜனாதிபதி, ஒரு பெண் சபாநாயகர் பல முதலமைச்சர்கள், பெண் விளையாட்டு வீரர்கள், விண்வெளி வீராங்களைகள் என்று உலகம் பெருமைப்பட சொல்லிக் கொண்டாலும், பெண்களின் நிலை சொல்லிக்கொள்ளும் அளவுக்கு பசுமையானதாக இல்லை. பாலியல் கொடுமைகளுக்கு ஆளாகும் பெண்கள் பலர் 3 மாத குழந்தை, முதுமை பெண் முதல் காவல் துறை அதிகாரிகள் முடிய விதிவிலக்கல்ல. பல பெண்கள் சமுதாயத்தின் தீ நாக்குகளுக்கு பயந்துகொண்டு தங்கள் துயரங்களை அவமானங்களை வெளியில் சொல்லாமல் மறைத்து வைத்து அமைதியை தொலைத்துவிட்டு வாழ்ந்து வருகிறார்கள். ஆனால், நாற்காலியில் அமர்ந்திருப்பவர்களும் நீதிமன்றங்களும் வாய்மூடி மெளனம் காப்பார்கள். ஆனால் ஒருசில அமைப்புகள் மட்டும் பெண்களுக்கு எதிரான பிரச்சனைகளை எடுத்து போராடுகின்றனர்.

## பெண்கள் தினம் சொல்லும் செய்தி என்ன?

பெண்ணுரிமைக்காகப் போராடி போராளி களைப் பற்றியும் பெண்கள் போர் குணத்துடன் கட்டியமைந்த இயக்கங்கள் பற்றியும் இந்நாளில் நன்றியுடன் நினைத்து சிறப்புச் செய்ய வேண்டும். கடந்த கால வரலாற்றை அதில் நடந்த தவறுகளை திறந்த மனதோடு இருபாலரும் கற்று ஆராய்ந்து தீர்வு காண வேண்டும்

அன்பிற்கு அடையாளமாகவும் தெய்வங்களாக வும் தெய்வத்தன்மை சூட்டப்பட்டாலும் பெண் சமூகத்தை மிகவும் கீழான நிலையிலேயே சமூகம் வைத்திருக்கிறது என்பது வரலாற்று உண்மை. பெண்களுக்கெதிரான கொடுமையைக் கண்டு அயர்ந்து போகாமல் எதிர்த்து நின்று பிரகாசிப்போம் என்பதுதான் இந்த உலகத்திற்கு தெரிவிக்கும் செய்தி.

பெண்ணே நீ உனக்கென வாழ்வது எப்போது
உண்மையான மாற்றம் வரும் அப்போது.
தடை விதிப்போரின் தடை உடைத்து புறப்படு
தைரியம் விதைப் போரின் தடம் பார்த்து நடைபோடு
போராட்டத்திற்கான விதை விதைக்கப்பட்ட
மார்ச் 8 மகளிர் தின இன்நாளில்.

- ***சி.பரமேஸ்வரி***

## தமிழ்நாடு தொழிற்பயிற்சி அலுவலர் சங்கத்தின் உதவி





தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பில் 2.2.2021 முதல் 10.2.2021 வரை நடைபெற்ற தொடர் மறியல் மற்றும் சிறை நிரப்பும் போராட்டத்தின்போது கைதாகி மண்டப சிறையில் அடைத்து வைக்கப்பட்டு கொசுக்கடியில் தவித்த 60 தோழர்களுக்கு சென்னை தமிழ்நாடு தொழிற் பயிற்சி அலுவலர் சங்கத்தின், வடசென்னை, அம்பத்தூர், வடகரை கிளைகள் சார்பாக போர்வையும், வட/தென் சென்னை மாவட்ட மையத்திற்கு ஒலிபெருக்கியும் மாநிலத் தலைவர் மு.அன்பரசு மற்றும் பொதுச் செயலாளர் ஆ.செல்வம் ஆகியோர் முன்னிலையில் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் தொழிற் பயிற்சி அலுவலர் சங்க மாநில நிர்வாகிகளும், சென்னை கிளை நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்.

## மார்ச் – 8 சர்வதேச மகளிர் தினம்

# மாவட்ட அளவிலான கருத்தரங்கம்

# சிங்கப் பெண்ணே..!
# சங்கம் உன் பின்னே..!

**அன்பிற்கினியோரே! வணக்கம்.**

## போராளி உருவாவதில்லை, உருவாக்கப்படுகிறாள்



போராட்டம் என்ற ஒன்று வரும்போதுதான் பெண் அரசு ஊழியரோ, ஆசிரியரோ ஒன்று காணாமல் போகிறாள் அல்லது கண்டெடுக்கப்படுகிறாள் இல்லையெனில் வேறொருவர் ஆகிறாள் ஒரு கோசம், ஒரு மறியல், ஒரு கைது, ஒரு விடுதலை இவற்றின் மூலம் எதுவுமற்றவளாக இருந்தவள் எதிர்கால போருக்கான எல்லாத் தடவாளங்களையும் அவளுக்குள் தயாரித்து கொள்கிறாள். கரப்பான் பூச்சிக்கு அஞ்சும் அவள்தான் காவல்துறையின் பூட்ஸ் கால்களை ஒரு ஈசலைத் தட்டியதைப் போல் தட்டுகிறாள்.



சிறைகளுக்குள் அடைபட்டுக் கிடந்தாலும் விடுதலைக்கான புரட்சிக் கவிதைகளை எழுதும் கவிஞராகிறாள் ஒரு துளி வியர்வைக்குக் கூட கைக்குட்டையை தேடும் அவள், போராட்டங்களில் லத்தி அடியில் உதிர்கும் செங்குருதியைக் கூட பன்னீர்துளிகளைப் போல உணரத் தலைப்படுகிறாள்.

அடக்குமுறை ஏதும் அரசாங்கத்தின் பார்வையிலிருந்து ஒளியும் முயல் போல் ஒதுங்கிக் கிடந்தவள் சில போராட்ட அனுபவங்களுக்குப் பின் சிங்கம் போல சீறி எழுகிறாள், போராட்டங்கள் பழையவளை சாகடிக்கிறது. போராட்டங்கள் அவர்களது அன்றாடங்களை மாற்றியமைக்கிறது. போராட்டங்கள் தான் நாடுகளைக் கட்டமைக்கிறது.

போராட்டங்கள்தான் இப்போதைய தலைமுறைக்கான இருப்பையும் எதிர்காலத் சந்ததிக்கான நெருப்பையும் அடைகாத்து வைக்கிறது. எனவே போராட்டம் மட்டுமே உரிமைகளை மீட்டெடுப்பதற்கான வழி. உணர்வுகளை மதிப்பதற்கான மொழி. அதைத்தான் பெண் அரசு ஊழியர் சமூதாயம் இப்போது செய்துகொண்டிருக்கிறது.



**தொடர் மறியலும் சிறை நிரப்பும் போராட்டத்தில் பங்கேற்று, கைது செய்யப்பட்டு மண்டப சிறைக்குச் சென்ற பெண் போராளிகளுக்கு நிறைவான பாராட்டுகள்**

கடந்த 02.02.2021 முதல் 09.02.2021 வரை நடைபெற்ற தொடர் மறியல் சிறை நிரப்பும் போராட்டத்தில் வீரத்துடன் ஈடுபட்டு சிறை செல்லவும் தயங்காது குடும்பத்தை, குழந்தைகளை மறந்து இரவு பகல் பாராது சாலையிலும், மண்டபத்திலும் கைது செய்து

அடைக்கப்பட்டாலும் உரிமையை மீட்கும் வரை போர்களத்தில் முன்னின்று நமது இயக்கத்தின் வலிமையை உலகிற்கு பறைசாற்றிய ஒவ்வொரு பெண் போராளிகளுக்கும் அனைத்து மகளிர் தோழர்களுக்கும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் தனித்தனியே நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறது

பெண் போராளிகளே! உங்களின் தியாகமும், பங்களிப்பும் நல்லதொரு உதாரணமாக அனைவராலும் உணரப்பட்டுள்ளது. எனவே உங்களை காத்திடவும் நமது உரிமைகளை மீட்டெடுக்கும் நடவடிக்கைகளிலும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் தொய்வில்லாமல் தன் கடமையை ஆற்றும் என்ற உறுதிமொழியை இந்த சர்வதேச மகளிர் தினத்தில் உரித்தாக்குகின்றது.



## பெரும்பாலான மகளிர் பங்கேற்பு இயக்கத்தின் வலிமையை உரைக்கும் உரைகல்

கடந்த 19.02.2021 அன்று கோட்டை முற்றுகைப் போராட்டத்தில் சுமார் நான்காயிரம் பேர் பங்கேற்ற போர்களத்தில் அனைத்து துறைகளைச் சார்ந்த ஊழியர்களில் சரிபாதிக்கு மேலானவர்களாக பெண் ஊழியர்கள் இருந்தார்கள் என்பது இந்த அரசையும், அதிகாரவர்க்கத்தையும், ஏவல் செய்யும் காவல் துறையும் பயமுறுத்திய செயலாக அமைந்தது.

மேற்சொன்ன கூற்றின் அடிப்படையில் இவ்வாண்டு சர்வதேச மகளிர் தினத்தை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் தமிழகம் தழுவிய அளவில் மாவட்டங்களில் சிங்கப் பெண்ணே..! சங்கம் உன் பின்னே..! என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடத்திடுவதென முடிவாற்றப்பட்டுள்ளது.

கருத்தரங்கில் திரளான பெண் ஊழியர்களை பங்கேற்கச் செய்து கருத்தரங்கத்தை எழுச்சியுடன் சிறப்பித்தடவும் தோழமையுடன் கேட்டுக் கொள்கிறோம்.



போராட்டக் களத்தில் பொறுப்புணர்வோடு நின்ற பெண் ஊழியர்களே!
அரசு பல தடைகளை அடக்குமுறைகளை ஏவி விரட்டப் பார்த்தும் எடுத்த முடிவில்
பிடித்த பிடி விடாமல் உறுதிபாட்டோடு குருதியை சிந்தினாலும் களம் நின்ற மகளிரே!
உங்கள் அனைவருக்கும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
மகளிர் தின புரட்சிக்கர வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறது.

*-மாநில மையம்*

# ஜனநாயகத்தை விற்றுவிடாமல் காப்போம்!

மை டியர் காம்ரேட்!

இன்று இந்திய ஆட்சியாளர்கள் ஒரே நாடு, ஒரே தேர்தல், ஒரே மொழி, ஒரே மதம் என்றெல்லாம் பேசி நாட்டின் பன்முகத் தன்மையையும் வேற்றுமையில் காணும் ஒற்றுமையையும் சீர்குலைக்கப் பார்க்கிறார்கள். ஒன்றுபட்டிருப்பதைவிட, ஒருவனுக்கு கீழே இருப்பதுதான் நாட்டின் வளர்ச்சிக்கு நல்லது என்கிற கூற்றை அவர்கள் முன் வைக்கிறார்கள். உலக நாடுகள் அனைத்தையும் தன் காலுக்குக் கீழே அடிமைப்படுத்தி வைத்திருக்க வேண்டும் என்று கங்கணம் கட்டிய ஐரோப்பிய நாடுகளால் கூட அதை ரொம்ப காலத்திற்கு நிறைவேற்ற முடியவில்லை. தோல்வியில் முடிந்த அந்த வரலாற்றை தூசு தட்டி எழுப்பி வெற்றி பெறுவது என்பது இந்திய மண்ணில் எப்போதும் நடக்காது. ஏனெனில் அடிமைத்தனத்திலே இருந்து விடுதலை பெற வேண்டும் என்ற உணர்வை உலக அரங்கில் முதன்முதலாக எழுப்பியது இந்தியாதான் என்கிற உண்மையை இன்றைய ஆட்சியாளர்கள், அரசியல்வாதிகள் உணராவிட்டாலும் இளைஞர்களும் யுவதிகளும் அரசு ஊழியர்களும் புரிந்து வைத்துக் கொள்ள வேண்டியது அவசியமானதாகும்.

உலகிலுள்ள நாடுகள் எல்லாம் ஐந்து ஐரோப்பிய நாடுகளுக்கு காலனியாக இருந்த காலம். அந்த ஐந்து நாடுகளின் கையில் தொண்ணூறு நாடுகள் அடிமைப்பட்டு கிடந்தன என்ற வரலாற்றை இன்றைய இளைய தலைமுறை அறிந்திருக்க வாய்ப்பில்லை. அப்படி அறிந்திருந்தாலும் அந்த அடிமைத்தனம் என்ன என்பதை அவன் உணர்ந்திருக்க மாட்டான்.

இன்று மத்திய சர்க்கார் போடுகின்ற ஒவ்வொரு திட்டமும் ஒவ்வொரு சட்டமும் இந்திய மக்களை ஒரு கொடையின் கீழ் அடிமைப்படுத்தும் ஏற்பாடுகளே என்பதை விபரமறிந்தோர் கூறி வருகின்றனர். இது இப்படியே தொடர்ந்தால் இந்தியாவில் காலனி ஆதிக்கம் காலூன்றிவிடும் என்கிறார்கள் அவர்கள். அந்தக்காலத்தில் பெல்ஜியத்திற்குக் காலனியாக, பிரெஞ்சுக்குக் காலனியாக, இன்னும் ஐரோப்பிய நாடுகளுக்குக் காலனியாகவே ஒவ்வொரு நாடும் விளங்கின என்றால் அது எத்தனை பேருக்குப் புரியும்? ஒவ்வொரு நாடும் இன்று சுதந்திரமாக இருப்பது போல சுமார் 100 வருடங்களுக்கு முன்னர் இருந்தது இல்லை. இலங்கை ஒரு நாட்டின் காலனி, பர்மா ஒரு நாட்டின் காலனி, இந்தியா ஒரு நாட்டின் காலனி எகிப்து, சூடான் போன்ற நாடுகளெல்லாம் காலனி நாடுகளே தவிர சுதந்திர நாடுகளாக இருந்ததே இல்லை.

இந்த சூழ்நிலையில்தான் ஒரு எண்பது தொண்ணூறு ஆண்டுகளுக்கு முன்பாக தோன்றிய இந்திய தேசிய காங்கிரஸ் மெது மெதுவாக தன்னுடைய கோரிக்கையை உயர்த்திக்கொண்டே வந்து கடைசியில் ஒரு கட்டத்தில், வெள்ளையனே வெளியேறு, முழுச் சுதந்திரம் வேண்டும், சுதந்திரம் எமது பிறப்புரிமை அதை அடைந்தே தீருவோம் என்று பாலகங்காதர திலகர் முழுக்கமிட்டதிலே இருந்து தொடர்ந்து வெள்ளையனே வெளியேறு இயக்கம் 1912ல் நடத்தியது வரை உலக வரலாற்றை நாம் எடுத்துப் பார்த்தால் இந்தியாதான் முதன் முதலிலே அந்நியர்களை வெளியேற்றுவது என்ற கோஷத்தை துவக்கிய நாடு என்பது புரியும்.

அதன்விளைவாக உலகத்திலே நடைபெற்ற உலகமகாயுத்தம் 1944ல் முடிந்த பிறகு இந்தியாவிற்கு என்று ஒரு புது அரசியல் கொள்கையை வகுப்பதற்கு பிரிட்டனிலே இருந்து தூதுவர்கள் வந்து காந்தியடிகளையும் நேருவையும் பிற தலைவர்களையும் சந்தித்துப் பேசினார்கள். அதன்விளைவாகவே இந்தியாவிற்கு 1947ஆம் ஆண்டு சுதந்திரம் கிடைத்தது. இதன்விளைவாக உலக அரங்கிலே, காலனியாக இருந்து விடுதலை பெற்ற முதல்நாடு இந்தியா என்ற பேரைப் பெற்றது. இந்தியா விடுதலை பெற்றதைத் தொடர்ந்து பிறநாடுகளும் ஒவ்வொன்றாக இந்தியாவின் பாணியைப் பின்பற்றி விடுதலை பெறத் துவங்கின.

இதிலிருந்து உலக நாடுகளில் இந்தியாவிற்கு உரிய தனித் தன்மையை நாம் அறிந்து கொள்ளலாம். உலக நாடுகளுக்கெல்லாம் முன்னோடியாக முதல் விடுதலை இயக்கத்தை தோற்றுவித்தது இந்தியா. பல நாடுகளில் அங்கொன்றும் இங்கொன்றுமாக சிலபல போராட்டங்கள் நடந்திருக்கலாம் அதில் சிறு வெற்றிகளும் கிட்டியிருக்கலாம். ஆனால் ஒரு நாட்டின் மக்களில் பெரும்பான்மையோர் கிளர்ந்தெழுந்து விடுதலை வேட்கையோடு போராட்டம் நடத்தி வெற்றி கண்ட வரலாற்றில் முதல் இடம் இந்தியாவுக்குத்தான். இதன் மூலம் முதல் விடுதலையை தான் பெற்றது மட்டுமல்லாமல் பிற நாடுகளின் விடுதலைகளுக்கும் காரணமாக அமைந்தது இந்திய விடுதலைப் போராட்ட வரலாறு.

இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகு இந்தியாவுக்கான அரசியல் நிர்ணய சட்டம் தயாராகின்ற வரையில், 1946ஆம் ஆண்டிலேயே இந்தியாவுக்கு ஒரு தேர்தல் நடந்தது. அதில் காங்கிரஸ் பலத்த மெஜாரிட்டியோடு வெற்றி பெற்றது. அதன்பிறகு அரசியல் நிர்ணய சபை என்று ஒன்று உருவாயிற்று. அந்த அரசியல் நிர்ணய சபையில் காங்கிரஸ் காரர்கள் மட்டுமல்லாது இந்தியாவின் மிகப்பெரிய வக்கீல்கள், ராஜதந்திரிகள், நீதிபதிகள், மிகப்பெரிய சமுதாயத் தலைவர்கள் எல்லோருமே அங்கம் வகித்தார்கள். அந்த அரசியல் நிர்ணய சபைதான் இந்திய மக்களுக்கான அரசியல் சட்டத்தை உருவாக்கியது.

1952ல் வயது வந்தோருக்கு வாக்குரிமை என்ற அடிப்படையில் எல்லோரும் வாக்களிக்க உரிமை வழங்கப்பட்டது. அந்த காலகட்டத்தில் தான் பேச்சுரிமை, எழுத்துரிமை பரவலாகத் தொடங்கியது. இந்தியாவின் ஜனநாயகத்தை உலகம் கூர்ந்து கவனிக்கத் துவங்கியது. இவ்வளவு பரவலாக ஜனநாயகம் உலகத்தில் வேறு எங்கும் கிடையாது.

ஜனநாயகத்தை முதன்முதலில் கண்டுபிடித்தவர்கள் கிரேக்கர்கள். அதன்பிறகு பிரிட்டனிலேயும் அந்த டெமாக்கரஸி உருவாயிற்று. அதன்பிறகுதான் அமெரிக்காவிலும் பிறகு இந்தியாவிலும் அது வளர்ந்தது. இந்தியாவிலே உருவான ஜனநாயகம் மற்ற மூன்று ஜனநாயகங்களையும் தோற்கடித்ததற்குக் காரணம். இது அவற்றைவிட வலிமையானது. அமெரிக்காவிலும் சரி, பிரிட்டனிலேயும் சரி. எந்த நாட்டிலேயும் சரி எந்த ஒரு தனிக்கட்சியும் தனிக்கொடி போட்டுக்கொள்ள முடியாது. யாரும் மண்டபத்திலே கூட்டம் போட்டுக்கொள்ளலாம் ஆனால் மேலே பறக்கின்ற கொடி அரசாங்கக் கொடியாக இருக்க வேண்டும். கொடி என்று எந்த அரசியல் கட்சியும் தனியாக போட்டுக்கொள்ள முடியாது. ஆனால் உலக வரலாற்றில் முதன்முதலாக பலகட்சி ஜனநாயகத்துக்கு அனுமதி அளித்து அதை தோற்றுவித்த பெருமை இந்தியாவினுடையது. இது இந்திய குடிமக்களுக்கு எழுத்துரிமை, பேச்சுரிமை, கருத்துரிமை, வழக்காடு உரிமை, வாதாடும் உரிமை என எல்லா உரிமைகளையும் வாரி வழங்கியது.

இந்திய அரசாங்கத்தை எதிர்க்கலாம், இந்தியாவையே கேலி பேசலாம், ஆனால் இந்தியாவிற்கு எதிராகப் போய்விட முடியாது என்ற உரிமையை மட்டும் கையிலே வைத்துக்கொண்டு பாக்கி எல்லா உரிமைகளையும் வழங்கியது இந்திய ஜனநாயகம். உலக ஜனநாயகத்தை வெல்லக்கூடியதாக அது அமைந்தது.

இவ்வளவு ஒரு பரவலான ஜனநாயகத்தை இந்தியாவுக்கு வழங்கலாமா என்பது பற்றி கடைசி வைஸ்ராயான மவுண்ட் பேட்டர்ன் பண்டித ஜவகர்லால் நேருவிடம் “நூற்றுக்கு தொண்ணூறு பேர்கள் தற்குறிகளாக இருக்கும் ஒரு நாட்டில், இப்படி பரவலாக ஜனநாயகத்தை வழங்குவது ஆபத்தாகும். ஜமீன்களும். மிட்டாக்களும், மிராசுகளும், சமஸ்தானாதிபதிகளும், பணக்காரர்களும் நிறைந்த ஒரு சமுதாயத்தில் அவர்கள் இந்த வாக்குகளை விலைக்கு வாங்கி, இவ்வளவு நாள் போராடிய காங்கிரஸை இருந்த இடம் தெரியாமல் அழித்துவிடுவார்கள்'' என்று கூறினார்.

ஆனால் பண்டித நேரு, அவர் சொன்னதையும் மீறி இந்திய மக்கள் அனைவருக்கும் வாக்குரிமையை அளிக்க முடிவு செய்தார். அதற்கு அவர் சொன்ன ஒரே காரணம்:

“இதுவரையிலே பெரிய ஜாதிக்காரர்கள், பெரிய பணக்காரர்கள் தங்கள் வீட்டுப் பக்கம் ஏழைகளை அனுமதிப்பதில்லை, ஏழை வீட்டுப் பக்கம் அவர்கள் போவதில்லை. கீழ்சாதி, மேல்ஜாதி என்ற கொடுமை இந்த நாட்டிலே மிக அதிகம் ‘அவனது வீட்டுப் பக்கம் போவதே பாவம், குற்றம்’ என்றெல்லாம் கருதிக் கொண்டிருந்தார்கள், அவன் கையிலேயும் நான் ஒரு ஓட்டுச் சீட்டைக் கொடுத்துவிட்டால், இனிமேல் ராஜாக்கள் கிடையாது ஜமீன், மிட்டா, மிராசு கிடையாது. எம்.எல்.ஏ., எம்.பி., ஆக வேண்டுமென்று விரும்புகிற எவனும் ஏழை வீட்டுக் குடிசைப் பக்கம் நுழைந்து, சரியோ, தப்போ, அவன் காலைக் கையைப் பிடித்து, அவன் வீட்டிலேயேயும் மோர் வாங்கிச் சாப்பிட்டு, ‘உன்னுடைய ஓட்டு எனக்கு வேணும்’ என்று கெஞ்சுவான். அப்படி கெஞ்சப் போகிறானே, அந்த ஒரு காரணத்திற்காகவாவது நான் ஏழையின் கையில் 21 வயதிலேயே வாக்குரிமையைச் கொடுப்பேன்.'' என்று சொல்லிவிட்டு நேரு அந்த வாக்குரிமையைக் கொடுத்தார்.

அன்று காங்கிரஸ் கொடுத்த வாக்குரிமையை வைத்துக்கொண்டே அதைத் தோற்கடிக்கப் பலர் முயன்றார்கள். ஆனாலும் நேரு மனம் தளரவில்லை.'' நான் கொடுத்திருக்கிற உரிமைகளை அவர்கள் எப்படி வேண்டுமானாலும் பயன்படுத்தட்டும். அந்த உரிமை என்னை தாக்கும் அல்லது என்னை அழிக்கும் அல்லது காங்கிரஸையும் அழிக்கும் என்றால் அதை ஏற்றுக்கொள்ளச் சித்தமாயிருக்கிறேன்.'' என்றார்.

ஆக, அவ்வளவு பெரிய ஜனநாயகத்தை அடிப்படையிலே அமைத்துக் கொடுத்துவிட்டுச் சென்றார் பண்டித ஜவஹர்லால் நேரு. ஆனால் இன்று கிராமங்களில் நாட்டாண்மைகளாக இருப்பவர்கள், பணக்காரர்கள், கம்பெனி முதலாளிகள், கார்ப்பரேட் கனவான்கள் என அனைவரும் ஒன்று சேர்ந்து கொண்டு இந்த ஜனநாயகத்தை ஒழித்துக் கட்ட ஒரு ஏஜெண்ட்டை அமைத்து ஒரே நாடு, ஒரே மொழி, ஒரே சட்டம் என்று பலவிதமான சட்டங்களின் மூலம் ஜனநாயகத்தை மூட்டை கட்டி போடப்பார்க்கிறார்கள். ஏழைகளை முடமாக்கப் பார்க்கிறார்கள். அவர்கள் ஏழைகளின் ஓட்டை விலைக்கு வாங்கி ஜனநாயகத்தை இருந்த இடம் தெரியாமல் அழிக்கப்ப பார்க்கிறார்கள்

ஜனநாயகத்தின் உயர்ந்த அம்சமும், உன்னத அம்சமும் வாக்குச் சீட்டாகும். அதை நாம் நம்முடைய ஜனநாயகத்தைக் காக்க பயன்படுத்த வேண்டுமே தவிர விற்றுவிடுதலோ, அனுதாபத்திற்கு ஆட்படுதலோ இல்லாமல் ஜனநாயகத்தைக் காப்போருக்கும் ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை வைத்தோருக்கும் பேச்சுரிமை எழுத்துரிமை கருத்துரிமை போன்ற அடிப்படை உரிமைகள் பெற போராடி பெற்றுத்தந்த அனைத்து தலைவர்களையும் நினைவு கூர்ந்து. ஐந்து வருடத்திற்கு ஒரு முறை வரும் ஜனநாயகக் கடமையை ஆற்றி பெற்ற விடுதலையையும் சுதந்திரத்தையும் பேணிக் காப்போம்.

**– ஜிஜி**

சுருக்கம்

*கருணை அடிப்படையில் பணிநியமனம் - 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டவர்களின் பணியினை வரன்முறைப்படுத்துதல் - ஆணை மற்றும் வழிமுறைகள் வெளியிடப்படுகின்றன.*

---

*தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ 1) துறை*

*அரசாணை (நிலை) எண்.48* — *நாள்: 26.02.2021*

*சார்வரி, மாசி 14*

*திருவள்ளுவர் ஆண்டு 2052*

*படிக்கப்பட்டது:-*

1. *அரசாணை (நிலை) எண்.80, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ 1) துறை, நாள் 02.03.2016*
2. *அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ 1) துறை, நாள் 23.01.2020*
3. *கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையரின் கடித எண்.18395/2020, நாள் 06.11.2020.*

**ஆணை: -**

மேலே 1-ல் படிக்கப்பட்ட அரசாணையில், கருணை அடிப்படையில் பணிநியமனம் பெற்ற அரசுப் பணியாளர்களின் பணியினை வரன்முறைப்படுத்துவதில் பல்வேறு காரணங்களால் ஏற்படும் காலதாமதத்தினை கருத்திற்கொண்டு, 19.02.2016 அன்று சட்டமன்றப் பேரவையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110-ன்கீழ் அறிவிக்கப்பட்ட அறிவிப்பின் அடிப்படையில் 01.02.2016 வரை கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட பணியாளர்களின் பணிவரன்முறை செய்திட ஆணை மற்றும் வழிமுறைகள் வெளியிடப்பட்டன.

2. மேலை 2-ல் படிக்கப்பட்ட அரசாணையில், கருணை அடிப்படையிலான பணிநியமனம் குறித்து வரையறுக்கப்பட்ட ஒருங்கிணைந்த வழிகாட்டு நெறிமுறைகள் (Guidelines) வெளியிடப்பட்டன.

3. மேலே 3-ல் படிக்கப்பட்ட கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையரின் கடிதத்தில், தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தினர் கீழ்க்கண்ட கோரிக்கையினை முன்வைத்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

> **"கருணை அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட இளநிலை வருவாய் ஆய்வாளர்களின் பணிவரன்முறை ஆண்டுக் கணக்கில் தேக்கமடைந்துள்ளதால், இவ்வலுவலர்களின் பணி நலங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதால், நிலுவையில் உள்ள இனங்களை ஒரே அரசாணையில் பணிவரன்முறை செய்திட வேண்டும்".**

4. அதனடிப்படையில், வருவாய் துறையின் செயற்குறிப்பில் 02.02.2016 முதல் 31.12.2019 வரை வருவாய்த் துறையில் கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட இளநிலை வருவாய் ஆய்வாளர்கள், கிராம நிருவாக அலுவலர்கள் மற்றும் தட்டச்சு ஆகியோருக்கு, எந்தவித விதித்தளர்வு மற்றும் அரசானைகளுக்கு விலக்கு தேவைப்படாத அனைத்து பணியாளர்களின் பணிநியமனங்களையும், ஒரே அரசாணையில் பணிவரன்முறை செய்ய பரிந்துரைத்துள்ளது.

5. வருவாய் துறையின் செயற்குறிப்பினை ஏற்று, அனைத்து துறைகளிலும் இதனை செய்தால் நியாயமாக இருக்கும் என்பதால் 02.02.2016 முதல் 31.12.2019 வரையுள்ள கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட பணியாளர்களின் பணியினை வரன்முறை செய்திட எதுவாக, இந்நேர்வினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து கீழ்க்கண்ட வழிமுறைகளை (Guidelines) பின்பற்ற வேண்டும் என ஆணையிடுகிறது .

*(5.1)* 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணையடிப்படையில் பணியமர்த்தப்பட்டு எந்தவித விதித்தளர்வு (Relaxation of Rules) மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு (Exemption of Government Orders) தேவைப்படாத அனைத்து பணியாளர்களின் பணி நியமனமும் நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு வரன்முறைப்படுத்தப்படும்.

*(5-2)* மேலே பத்தி 5.1-ல் உள்ள ஆணையினை செயல்படுத்த, சம்பந்தப்பட்ட நியமன அலுவலர்களின் (Appointing authority) ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அதுவலர்கள் (one levol higher than the appointing

authorly), அவரவர் அரசு பணியாளரின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கருனை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அரசு பணியாளரின் பணியினை வரன்முறை செய்திட, உரிய செயல்முறை ஆனை (Proceedings) வெளியிட்டு, தொடர்புடைய பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும் என அறிவுறுத்தப்படுகின்றனர்.

*(5-3)* கருணை காப்பாயில் பணிநியமனம் பெற்ற அரசு பணியாளர்களின் பணியினை வரன்முறைப்படுத்த விதித்தளர்வு / அரசாணைகளுக்கு விலக்கு தேவைப்படும் பணியாளர்களை பொறுத்தவரையில், அவர்களை தற்காலிக அரசு பணியாளர்களாக கருதி நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு அவர்களுக்கு இரண்டாம் மற்றும் தொடர் ஆண்டு ஊதிய உயர்வு வழங்கப்பட வேண்டும்.

*(5.4)* மேலே 5.3ல் குறிப்பிடப்பட்ட அரசு பணியாளர்கள் பொருட்டு உரிய விதித்தளர்வு / அரசாணைகளுக்கு விலக்கு தேவைப்படும் கருத்துருவினை அரசிற்கு உரிய வழிமுறையாக அனுப்பப்பட வேண்டும். பின்னர் விதித்தளர்வு / அரசாணைகளுக்கு விலக்கு குறித்த அரசாணை வெளியிடப்பட வேண்டும்.

*5.* இவ்வரசாணை, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த துறையின் அ.சா.எண்.*6945/ஜி2/2021*, நாள் *26.02.2021*-இல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

*(ஆளுநரின் ஆணைப்படி)*

முகமது நசிமுத்தின்

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பிரிவு அலுவலர்

# துறைவாரி சங்க நிகழ்வுகள்

## தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்கம்

பெண்கள் தலைமையில் கருப்பு உடை அணிந்து மறியல் போராட்டம் 23.02.2021 அன்று தமிழகம் முழுவதும் 32 மாவட்டங்களில் பெண்கள் தலைமையில் கருப்பு உடை அணிந்து மாவட்ட தலைநகரங்களில் மறியல் சிறப்பாக நடைபெற்றது சத்துணவு ஊழியர்களுக்கு காலமுறை ஊதியம் வழங்க வேண்டும் பணிக்கொடை ஆக அமைப்பாளர்களுக்கு ரூபாய் 5 லட்சமும் சமையல் உதவியாளர்களுக்கு ரூபாய் 3 லட்சமும் வழங்க வேண்டும் என்றும் குடும்ப பாதுகாப்புடன் கூடிய ஓய்வு ஊதியம் குறைந்தபட்சம் 9 ஆயிரம் வழங்க வேண்டும் என்றும் தமிழகம் முழுவதும் சத்துணவு கூடங்களில் காலியாக உள்ள அமைப்பாளர் சமையலர் மற்றும் சமையல் உதவியாளர் பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும் என்று வலியுறுத்தி மறியல் நடைபெற்றது இந்த மறியலில் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட ஊழியர்கள் கலந்து கொண்டது சிறப்பம்சமாகும்.

## திருவாரூர்

தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்கத்தின் திருவாரூர் மாவட்ட மையத்தின் சார்பில் 23.2.21



அன்று திருவாரூர் வட்டாட்சியர் அலுவலகம் முன்பாக கருப்பு உடையணிந்து மறியல் போராட்டம் நடைபெற்றது. மறியல் போராட்டத்தில் TNGEA மாவட்ட செயலாளர் வெ.சோமசுந்தரம் துவக்கி வைத்து உரையாற்றினார். போராட்டத்தினை வாழ்த்தி மாவட்ட தலைவர் எம்.ராஜமாணிக்கம் உள்ளிட்ட துறைவாரி சங்க நிர்வாகிகள் பேசினர்.

## நாகப்பட்டினம்



சத்துணவு ஊழியர் சங்க மாவட்ட மையம் சார்பில் நாகை வட்டாட்சியர் அலுவலகம் முன்பு கருப்பு உடை அணிந்து பெண்கள் தலைமையில் மறியல் போராட்டம் மாவட்டத் தலைவர் வி.தேன்மொழி தலைமையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் கே.இராஜு விளக்கவுரையாற்றினார்.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்டச் செயலாளர் அ.தி.அன்பழகன், வட்டச் செயலாளர் எம்.தமிழ்வாணன், ஓய்வூதியர் சங்க மாவட்டச் செயலாளர் சொ.கிருஷ்ணசாமி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

16 ஆண்கள் உட்பட 202 பேரை வெளிப்பாளையம் காவல்துறையினர் கைதுசெய்து திருமண மண்டபத்தில் அடைத்தனர்.

## தமிழ்நாடு நெடுஞ்சாலைத் துறை சாலைப் பணியாளர் சங்கம்

சங்கத்தின் 7வது மாநில மாநாட்டு முடிவின்படி கடந்த பதினைந்து ஆண்டு காலமாக சங்கத்தின் சார்பில் வலியுறுத்தப்பட்டு வரும் கோரிக்கைகளான

சாலைப் பணியாளர்களின் 41 மாத பணி நீக்க காலத்தை பணிக்காலமாக முறைப்படுத்தி ஆணை வழங்கிட வேண்டும். பணப்பலன்கள் வழங்கிட வேண்டும், பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி சாலைப் பணியாளர்கள், குடும்ப பெண்கள், குழந்தைகள் கருப்பு உடையணிந்து தொடர் காத்திருப்பு சங்கொலிப் போராட்டம் 25.02.2021 காலை 10 மணிக்கு கிண்டியில் உள்ள முதன்மை இயக்குநர் அலுவலகத்தில் துவங்க இருந்த நேரத்தில் காவல் துறையினரை ஏவி போராட்டத்தில் ஈடுபட்டவர்களை கைது செய்து மண்டபத்தில் அடைத்து வைத்தனர்.

தொடர்ந்து 26.02.2021 அன்றும் போராட்டம் தொடர்ந்தது. மீண்டும் காவல் துறையின் அராஜகம் தொடர்ந்தது. ஊழியர்களை குண்டுக்கட்டாக இழுத்துச் சென்று மண்டபத்தில் அடைத்தனர். இந்நிலையில் தேர்தல் நடைமுறைகள் அமுலுக்கு வந்ததால் உடனடியாக மாநில நிர்வாகிகள் கூடி தாக்குதல் நடத்திய காவல் துறையினர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், மௌனப் புரட்சியின் மூலம் கோரிக்கைகளை வென்றெடுப்பது எனவும் முடிவாற்றப்பட்டது.

இந்நிகழ்வுக்கு சங்கத்தின் மாநிலத் தலைவர் மா.பாலசுப்பிரமணியன் தலைமையேற்றார். மாநிலத் துணைத்தலைவர்கள் து.சிங்கராயன், கா.ரவி, பெ.முத்து, ச.மகேந்திரன், கி.ராஜமாணிக்கம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். போராட்டத்தை வாழ்த்தி தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் தென்சென்னை மாவட்டத் தலைவர் சா.டேனியல் ஜெய்சிங், வடசென்னை மாவட்டச் செயலாளர் மா.அந்தோணிசாமி, தமிழ்நாடு கல்வித்துறை அலுவலர் சங்கத்தின் மாநிலப் பொருளாளர் சா.வினோத்குமார், ஜாக்டோ-ஜியோ ஒருங்கிணைப்பாளர் கு.வெங்கடேசன், ஜாக்டோ-ஜியோ செய்தித் தொடர்பாளர் கு.தியாகராஜன், தமிழ்நாடு நெடுஞ்சாலைத் துறை ஊழியர் சங்கத்தின் மாநிலப் பொருளாளர் பச்சமுத்து, தமிழ்நாடு இந்து சமய அறநிலையத் துறை அலுவலர் சங்கத்தின் மாநிலத் தலைவர் தெ.வாசுகி, தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலச் செயலாளர் இரா.ந.நம்பிராஜன் ஆகியோர் வாழ்த்தி பேசினர். சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் அ.அம்சராஜ் கோரிக்கை விளக்கவுரையாற்றினார். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் மு.அன்பரசு நிறைவுரையாற்றினார். சங்கத்தின் மாநிலப் பொருளாளர் இரா.தமிழ் நன்றி கூறினார். ■

Printed and Published by M. ANBARASU on behalf of Tamil Nadu Government Employees Association, at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai 600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai 600002, Editor: A.SELVAM. Phone: 28441286
E-mail: arasuoozhiyar@gmail.com